ஓம்
பரப்பிரஹ்மணே நம:

# ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்

(*All Rights Reserved.*)

| தொகுதி | நள௵ பங்குனி௴ 1௳ | பகுதி |
|---|---|---|
| 2 | 1917-ம்௵ மார்ச்சு௴ 14௳ | 9 |

## கடவுள் வணக்கம்.

வாழ்வனைத்து மயக்கமெனத் தேர்ந்தேன் றேர்ந்த
வாறேநா னப்பாலோர் வழிபா ராமல்
தாழ்வுபெற்றிங் கிருந்தேனீ தென்ன மாயக்
தடையுற்றான் மேற்கதியுந் தடைய தாமே
ஊழ்வலியோ வல்லதுன்றன் றிருக்கூத் தோவிங்
கொருதமியேன் மேற்குறையோ வுணர்த்தா யின்னம்
பாழவதிப படவெனக்கு முடியா தெல்லாம்
படைத்தளித்துத் துடைக்க வல்ல பரிசி னானே.

நானானிங் கெனுமகந்தை யெனக்கேன் வைத்தாய்
நல்வினைதீ வினையெனவே நடுவே நாட்டி
ஊனாரு முடற்சுமையென் மீதேன் வைத்தா
யுயிரெனவு மென்னையொன்றா வுள்ளேன் வைத்தாய்
ஆனாமை யாயகில நிகிலபேத
மனைத்தினுள்ளுந் தானாகி யறிவா னந்தத்
தேனாகிப் பாலாகிக் கனியாய்க் கன்னற்
செழும்பாகாய்க் கற்கண்டாய்த் திகழ்ந்த வொண்றே.

பெற்றவர்பெற்ற பெருந்தவக் குன்றே
பெருகிய கருணைவா ரிதியே
நற்றவத் துணையே யானந்தக் கடலே
ஞாதுரு ஞானனோ யங்கள்
அற்றவர்க் கறாத நட்புடைக் கலப்பே
யனேகமாய் நின்னடிக் கன்பு
கற்றதுங் கேள்வி கேட்டது நின்னைக்
கண்டிடும் பொருட்டன்றோ காணே.

# ஆனந்தபோதினி

௱௯ பங்குனிமீ 1உ

## திரிகரணசுத்தி.

நாம் பன்முறை பல சந்தர்ப்பங்களில் திரிகரணசுத்தி என்ற மொழியைக் கேள்விப்படுகிறோம். ஆகையால் ஒருமுறை யதன் பொருள் விசேடத்தைப்பற்றி சற்று ஆராய்வாம். அது திரி + கரணம் + சுத்தி என்ற மூன்று பதங்கள்சேர்ந்த ஒரு பகுபதமாகும். கரணம் என்பது அகக்கரணங்கள் புறக்கரணங்கள் என்று இருவிதமாயிருப்பினும், இச்சந்தர்ப்பத்தில் திரிகரணங்கள் என்பது மனம், வாக்கு, காயம் என்ற மூன்றையுமே குறிக்கும். ஆகவே திரிகரணசுத்தியென்பது அவைமூன்றினாலும் நாம் செய்யும் செய்கைகள் சுத்தமானவைகளாய், அதாவது குற்றமற்றவைகளாய், இருக்கவேண்டும் என்றும், மூன்றும் ஒருமித்தே ஒன்றைச் செய்யவேண்டும் என்றும் பொருள் தருகிறது.

நாம் செய்யும் ஒவ்வொரு செய்கைக்கும் இவைமூன்றும் காரணமா யிருக்கின்றன. முதல் முதல் மனதால் ஒன்றைச் சிந்திக்கிறோம், பிறகு வாக்கால் அச்சிந்தனையை வெளியிடுகிறோம், அதன் பிறகு காயத்தால் அதைச் செய்கிறோம். நமது செய்கைகளுக்கு இவைமூன்றும் காரணமாயிருப்பதால் நாம் சேகரிக்கும் புண்ணிய பாபங்களுக்கு இவைகளே காரணமாகின்றன. ஆயினும் எந்தச் செய்கைக்கும் ஆதியாய் வேண்டிய சிந்தனை உதிக்குமிடம் மனமே. ஆகையால் மனமே முதற்காரணமாயிருக்கிறது. அதனால் முதலாவதாய் மனம் சுத்தமா யிருத்தல்வேண்டும்.

மனம் சுத்தமாயிருத்தலாவது, பேராசைகொள்ளுதல், பொறாமைப்படுதல், ஒருவர்க்குத் தீங்குநினைத்தல், இன்னொருவன் கெட்டாலும் தனக்கு பலன் கிடைக்கவேண்டும் என்று எண்ணுதல், பிறர் துயரைக்கண்டு வருந்தாதிருத்தல், ஒருவர்மேல் வஞ்சம் வைத்தல், செய்நன்றி மறத்தல், நமக்குச் சொந்தமானதை ஏன் கொடுக்கவேண்டும் என்று நினைத்தல், ஒருவர்க்குத் தீங்கிழைத்தல், இச்சகம் பேசுதல், மனசாட்சிக்கு ஒவ்வாததைச்செய்தல், இவை முதலிய

வைகளெல்லாம் மனதினிடத்தில் அசுத்தத்தை யுண்டாக்குகின்றன. மனம்மட்டும் சுத்தமாயிருப்பின் வாக்கும் காயமும் அசுத்த காரியங்களைச்செய்யா. மனம் சுத்தமாயிருந்து காயத்தின் செய்கையால் அசுத்தம் நிகழ்ந்துவிட்டால் அப்பலன் ஆன்மாவைச் சாராது. மனம் தீங்குநினைத்து அதன்படி தேகம் செய்யின், அப்போதுமட்டுமே அத்தீயசெய்கையாலாய கெட்டபயன் ஆன்மாவைச்சாரும். அப்படிக்கின்றி மனம் நன்மைசெய்யக்கருதி, தேகம் அவ்வாறே செய்யத்தொடங்கியதில், அது தீங்காய் முடிந்துவிட்டால் அதனாலுண்டாகிய கெட்டபலன் ஆன்மாவைச்சாராது. அவ்வாறு மனம் நன்மையை நினைத்தும் தேகம் அப்படியே செய்வதில் அது தீமையாய் முடிவது முண்டோவெனின், உண்டு. அப்படிப்பட்டதற்கே தெய்வ சங்கல்பம் என்று பெயரிடப்பட்டிருக்கிறது. அதற்கு இரண்டொரு திருட்டாந்தரங்கள் கூறுகிறோம்:—

(1) ஒருபிரம்மாண்டமான தொழிற்சாலையில் ஆணும் பெண்ணுமாய் அனேகர் வேலைசெய்துகொண்டிருந்தார்கள். சற்று இருட்டான ஒருமூலையில் எப்போதும் தீ விபத்திற்கஞ்சி இரண்டு மூன்று சிறு தகரத்தொட்டிகளில் ஜலம்வைத்திருப்பது வழக்கம். புதிதாய் வந்த ஒருவேலைக்காரன் சீக்கிரம் நெருப்புப் பிடிக்கக்கூடிய ஒருவித எண்ணெய்நிறைந்த ஒருதொட்டியைக் கொண்டுபோய் அத்தண்ணீர்த் தொட்டிகளோடு வைத்திருந்தான். அந்த ஸ்தலத்திற்குச் சமீபத்தில் ஆட்கள் பலவித வேலைகள் செய்துகொண்டிருந்தார்கள். ஒருஸ்திரீ ஏதோ சுத்திசெய்வதற்காக அடுப்பில் தண்ணீர் காய்ச்சிக் கொண்டிருக்கையில் அவளுடைய சீலை பற்றிக்கொண்டது. தண்ணீர் வைத்திருக்குமிடம் யாவர்க்கும் தெரியுமாதலால் அங்கிருந்த வேலையாட்களில் ஒருவன் துரிதமாய்ச்சென்று ஒருதொட்டியைத் தூக்கி வந்து அவசரத்தோடு அதிலிருந்த திரவபதார்த்தத்தை அவள்மேல் ஊற்றிவிட்டான். அந்தோ ! அதிலிருந்தது எண்ணெய் என்பதை அவன் அறியான். அந்த ஸ்திரீயின் தேகம் முழுதும் உடனே குபீரென்று ஒரேதீச்சுவாலையாகி சற்றுநேரத்திற்குள் அவள் துடிதுடித்து மடிந்தாள்.

(2) ஒரு ஸ்திரீக்கு இரண்டு குழந்தைகள் இருந்தன. சுமார் மூன்றுவயதுள்ள பெரியகுழந்தைக்கு தேகத்தில் ஒருகட்டி கிளம்பியிருந்தது. சுமார் ஒரு வயதுள்ள சிறிய குழந்தைக்குக் கண்ணோய் வந்திருந்தது. அவளுடைய தமையன் ஒரு மருந்துக்கடையி

விருப்பவன். அவள் அவனிடம் சங்கதியைக்கூற அவன் ஒரே அளவான இரண்டு சிறுபுட்டிகளில் ஒன்றில் கண்ணோய்மருந்தும், மற்றொன்றில் கட்டிக்குமேலே பூசும்மருந்தும் சற்று தாராளமாகவே ஊற்றிக்கொண்டுவந்துகொடுத்தான். அம்மாது இரவு ஏழுமணிக்கு குழந்தை கண்ணோயால் அழுதபோது தவறாய்க் கட்டிக்குப் பூசும் மருந்தையெடுத்துவந்து, குழந்தையின் கண்களில் ஊற்றி எண்ணெய் கட்டுவதுபோல் கட்டிவிட்டாள். பரிதாபம்! அக்குழந்தை மிக்க பாதைப்பட்டு கடைசியில் இரண்டு கண்களும் குருடாகிவிட்டன.

இத்தகைய சந்தர்ப்பங்களில் மனம் சிந்தித்து அக்காரியங்கள் நடந்தவையல்ல. ஆகையால் அவற்றால் நேரிட்ட தீங்கின் பலன் ஆன்மாவைச் சாராது. இதனால் 'திரிகரணசுத்தி' யென்பதை யடைவதற்கு முதலாவதாய் மனமே சுத்தமாயிருத்தல் வேண்டும். மனத்தகத்துள்ள அழுக்கறுவிடின் வெறும் செய்கையால் மட்டும் ஒரு பயனுங் கிடைக்காது. மனம் சுத்தமாயிருத்தலோடு எந்த காரியத்திலும் மனமும் வாக்கும் செய்கையும் ஒத்திருக்க வேண்டும்.

நம்மிற் பெரும்பாலோர் அப்படி நடப்பதில்லை. மனதில் ஒன்றிருக்க வாக்கால் ஒன்றைப்பேசுகிறோம். ஒருசெல்வவந்தனையாவது, அல்லது ஒருவனால் நமக்கொரு காரியம் ஆகவேண்டியதா யிருந்தால் அவனையாவது காணும்போது அவன் மகா லோபியாகவும் இரக்கமற்றவனாகவும் இருந்தபோதிலும் "தாங்கள் எவ்வளவோ புண்ணியவான், பிறர் துயரம் கண்டு சகியாதவர்கள். உங்களைப்பற்றி யாவரும் புகழ்ந்து கொள்ளுகிறார்கள். அதை நான் தங்கள்முன்பு சொல்லக்கூடாது" என்று பலவாறாகப் புகழ்ந்து கூறுகிறோம். சில வித்வான்களும், தாங்கள் நாடியிருக்கும் ஒரு காரியத்திற்காக ஒருவரிடம் சொல்பொருள் யாசிக்கச்செல்லும் சிலரும், தாங்கள் நாடிச் செல்லும் மனிதர்கள் எவ்வளவோ அயோக்கிய நடக்கையுடையவர்களென்பது உலகப் பிரசித்தமா யிருந்தாலும், அவர்களை "இந்திரனே, கன்னனே, குபேரனே, பரமசிவத்தின் அவதாரமே..." என்று அவர்களிடம் மருந்திற்கும் அகப்படாத உயர்ந்த குணங்களை யெல்லாம் கற்பித்து வாயில் வந்தபடி துதித்துப்பாடி விடுகிறார்கள். பிறகு இவர்களே பின்னால் அவர்களைத் தூஷிக்கிறார்கள். மனச்சுத்தமுடையோர் எதற்கஞ்சியும் எதைக்கோரியும் அவ்வாறு செய்யார்கள்.

கடவுள் விஷயத்தில் இவ்வாறு நடந்து கொள்வது பெரும் பாதகமாய் முடியும். மகாபக்தியோடு ஸ்நானம் செய்து பட்டு

வேஷ்டி யுடுத்து, இலட்சணமாய் கட்டுக்கட்டாய் விபூதியாவது, திருத்தமான திருமண்காப்பாவது இட்டுக்கொண்டு, தேங்காய் பழம் கற்பூரம் முதலிய யாவும் வாங்கிக்கொண்டு கோயிலுக்குச் சென்று தீபாராதனை நடக்கும்போது சிரமேற்கை கூப்பி "ஹர ஹர சிவசிவ-நாராயண-ராமா" என்று கூறுகிறான். வாக்கு வசனிப்பதும் கரம்கூப்பி யிருப்பதும் சரியே. அந்தோ! பாழுங் கண்ணும் மனமும் மட்டும் அங்கு பலிபீடத்தருகில் கும்பாலத்தி யேந்தி நிற்கும் கோயில்தாசி கோகிலத்தின்மேல் நாடி நிற்கின்றன—கால்கள் திருக்கோயிலை வலம் வருகின்றன. வாய் பஞ்சாட்சரமோ சடாக்ஷரமோ அஷ்டாக்ஷரமோ மொழிகிறது. மனமும் கண்களும் ஒழுங்காய் அலங்காரம் செய்துகொண்டு ஒய்யாரமாய் நடந்து கோயிலைச் சுற்றிவரும் மங்கையர்மேல் இருக்கின்றன. சிலர் கோயிலுக்குச் செல்வதே கேளிக்கையான சிற்றின்ப சுகத்தை யனுபவிக்கக் கருதியே. இத்தகையோர்களில் ஆடவர் தாம் அக்னிசாக்ஷியாய் மணந்தவளும், சுகதுக்கத்தில் சமபாகமுடையவளும் இம்மைமறுமைப் பயன்களுக்காகக் கூட்டாளியா யுழைக்க வேண்டியவளுமாகிய உத்தம பத்தினியை வீட்டில் ஏங்கி நிற்கவிட்டு விலைமாதரைக் கூட்டிக்கொண்டு திருக்கோயில்களில் நடக்கும் உத்ஸவாதிகளைக் காணச் செல்கிறார்கள். இத்தகையோர் கடவுளின் திருவிழா தரிசனத்தை ஓர் நாடகக்கூத்தாய்க் கருதுபவரே யாவர்.

இத்தகைய செய்கைகளால் பாபமூட்டை மென்மேலும் பெருகுகின்றதன்றி நற்பயன் அணுவளவேனும் கிட்டாது.

சந்யாசியென்பது உலகவாஞ்சை யற்றவன் என்பதேயாகும். காஷாயம் முதலியன அணிதலும் அகங்காரத்தை யடக்கியது முதலிய குறிகளேயாகும். பகிரங்கமாய் இல்லறத்தைவிட்டு வெளிவந்து நான் சந்யாசியென்று காஷாய மணிந்துகொண் டிருப்பவர்களில் எத்தனையோபேர் 1703 வது நெம்பர் முதலிய உயர்ந்த மல்வேஷ்டிக்குச் சாயம் ஏற்றி அதை யலங்காரமாய் உடுத்திக்கொண் டிருப்பதையும், சிவச்சின்னமாகிய உருத்திராக்கத்தின்மேல் தங்கம் நவரத்னம் இவைகளைப் பதித்து அலங்கார ஆபரணமா யணிந்துகொண் டிருப்பதையும் காணலாம். மனதில் சந்யாச முடையோர் பக்திச் சின்னங்களைத்தவிர ஏனையவற்றைப் பொருளாய் மதித்துச் சுமந்துகொண் டிரார்களென்றே ஆன்றோர் கூறுகின்றனர்.

இவையாவும் மனமொன்று வாக்கொன்று செய்கை யொன்று

யுடையார் நடக்கைகளேயாகும். சாதாரணமான இலௌகீகத் தொழில்களிலும், ஒரு தொழிலைச் செய்யும்போது மனம் வேறுபட்டிருந்தால் அத்தொழில் சரிவர நிறைவேறாது. அத்தகைய சந்தர்ப்பத்தில் "அவன் மனம்வைத்து அதைச் செய்திருந்தால் அது சரியாய்த்தான் முடிந்திருக்கும்" என்று கூறுவது யாவருமறிந்ததே.

ஆகையால் யாவற்றிற்கும் காரணமாகிய மனம் முன்பு பரிசுத்தமாக்கப்பட வேண்டும். மனமும் வாக்கும் செய்கையும் ஒருமித்திருக்கவே பழகல்வேண்டும். மனதினிடத்தில் சுத்தம் ஏற்படாத வரையில் செய்கையால் ஒரு பயனையு மடையோ மென்பதை யொருபோதும் மறக்கலாகாது.

---

## விபூதி—திருமண் மகிமை.

விபூதி, திருமண் முதலிய சின்னங்களை நுதலில் ஹிந்துக்கள் தரித்துக் கொள்வதைப்பற்றி சிலர் ஏளனம் செய்கின்றனர். அதற்குக் காரணம் அவர்களது அறியாமையே யாகும். நமது முன்னோர் உலகில் தாம் எதை யிழந்துவிட்டாலும் ஆன்மார்த்தத்தைமட்டும் இழந்துவிடலாகாது என்ற அக்கரையும் மன உறுதியு முடையவர்கள். ஆகையால் நமது இலௌகீக ஒழுக்கங்களையெல்லாம் அழியாத உண்மையாகிய ஆன்மஞானார்த்தம் விளங்கக் கூடியவண்ணமாய் அமைத்திருக்கிறார்கள். அவர்கள் ஏற்பாட்டின்படி நடந்தால் நாம் இயற்கையாகவே பிரதிதினமும் பன்முறை ஆண்டவனைச் சிந்திக்கும் வழக்கமுடையோர்களாவோம். மானிட ஜனன மெடுத்ததன் பலனை யடைவதற்கு அது எவ்வளவு அவசியமான தென்பது அறிவாளிக ளறிந்தவிஷயமே. நாம் தினம் பன்முறை அச்சின்னங்களை யணியும்போதெல்லாம் கடவுளைச் சிந்திக்கிறோம். திருட்டாந்தமாய் நாம் காலையில் துயிலெழுந்தவுடனும், மலஜலாதிகளைக்கழித்த பின்னும், போசனம் செய்யுமுன்பும், செய்த பின்னும், சவத்தைக் கண்டபோதும், நித்திரைக்குப் போகும்போதும், தேவதூஷணையான மொழிகளைக் கேட்டபோதும் விபூதி யணியவேண்டும் என்று விதித்திருக்கிறது. விபூதி யெப்போதணிந்தாலும் பஞ்சாக்ஷரத்தைஜபித்தே யணியவேண்டும். இதனால் நாம் ஈசுரவுபாசனையை மறவாதிருப்பதற்காக நமது முன்னோர் செய்திருக்கும் ஏற்பாடுகளின் சிறப்பு நன்கு விளங்குகிறதன்றோ! இதுமட்டுமல்ல: இன்னும் இதில் ஆன்மார்த்தத்திற்கு அவசியம்வேண்டிய அரியபெரிய உண்மைகளும் இரகசியமாய் அடங்கியிருக்கின்றன.

வெண்மைக் குறியணிதல் மோக்ஷயிச்சையைக் குறிக்கிறதென்றும், மஞ்சள் நிறம் அணிதல் தேவலோக போகவிச்சையைக் குறிக்கிறதென்றும், சிகப்பு நிறமணிதல் இகலோகபோக இச்சையைக் குறிக்கிறதென்றும் வேதத்தில் கூறப்பட்டிருக்கிறது. கந்தம் திருச்சூரணம் தரிப்போர் முக்கியமாய் இரண்டு புருவங்களுக்கும் மத்தியிலுள்ள லலாட ஸ்தானத்திலேயே யிடவேண்டுமென்று விதி

ஏற்பட்டிருக்கிறது. என் அங்கு இடவேண்டும். அதிலும் திருச்சூர்ணம் தரிப்பது அடிவட்டமாய் அகன்றும், மேற்செல்லச்செல்ல சிறுத்தும் தீபச்சுடர்போல் இருப்பானேன் என்ற கேள்வியுண்டாகும்போது அதன்விடை ஒரு முக்கியமான உண்மையை வெளியிடுகிறது. அதாவது,

ஒரு அறைமுழுதும் பிரகாசிக்கும் ஒரு தீபம் அவ்வறையிலுள்ள ஒரு சிறு மாடத்திலிருந்தே பிரகாசிப்பதுபோல், புருவமையத்திற்கு நேராயிருக்கும் சுழிமுனை யென்ற மாடத்திலிருந்து ஆன்மாவாகிய தீபச்சுடர் தேகமுழுதும் பிரகாசிக்கின்றது. அதைக் குறிப்பதற்கே அங்கு கந்தம் திருச்சூரணம் முதலிய எந்தக் குறியுமிடப்படுகிறது. நாம் எதைப்பற்றியாவது ஆழ்ந்து சிந்திக்கும்போது புருவங்களை நெறிப்பதும் கண்களின்பார்வையை யொன்றுசேர்த்து மேல்நோக்குவதும் இவ்வுண்மையை யனுபவமாய்க் காட்டும். ஆன்மஞானம் பெற விரும்பி யோகாப்பியாசம் செய்வோரும் கண்களின் பார்வையை நாசி நுனியில் வைக்கவேண்டும், புருவமையத்தை நோக்கவேண்டும், என்பது முதலிய விதிகளும் இக்காரணம்பற்றியே ஏற்பட்டவையாகும்.

விபூதி, என்றால் ஐசுவரியம், மங்களம் என்று பொருள். சிவன் விபூதி தூளணமணிந்த மேனியர் என்பது கடவுள் பரிசுத்தமானவர், மோக்ஷமே அவருடைய சொரூபம் என்பதைக் குறிக்கிறது. பசுவின் சாணத்தால் உண்டாக்கப் பட்டுள்ளதிலும் ஓர் அரிய பொருள் அடங்கியுள்ளது. பசு மிருகங்களில் சத்துவ குணச் சிருட்டியைச்சேர்ந்தது. அது பரிசுத்தமானதென்றும் அதனுடைய பஞ்ச கௌவியம் (பால்-தயிர்-நெய்-கோமயம்-கோஜலம்) பரிசுத்தத்தை யுண்டாக்கத் தக்கதென்றும் நமது வேதாகமங்களில் கூறப்பட்டிருக்கிறது. உலகில் சாதாரண அனுபவத்தாலேயே பசு எத்துணை சிறப்புவாய்ந்ததென்பது யாவருமறிந்ததே. ஈண்டு விரிக்கிற் பெருகும். இது நிற்க,

'பசு' என்ற பதத்திற்கு ஜீவன் என்றும் பொருள் உண்டு. பசுவின் மலத்தை அக்னியில் தகித்தால் வெண்மையானதும் சுத்தமானதுமாகிய விபூதி யுண்டாகிறது.

பசுவிற்கு மலம் இருப்பதுபோல் ஜீவனுக்கும் மும்மலங்கள் இருக்கின்றன (ஆணவம்-காமியம்-மாயை) இந்தச் சீவன் பாசத்தில் பந்தப்பட்டிருப்பதாலேயே இதற்கு 'பசு' என்ற பெயர்வந்தது. இந்தச் சீவனாகிய பசுவின் மும்மலங்களை ஞானம் என்னும் அக்னியால் தகித்தால் களங்கமற்ற மோக்ஷத்தைப் பெறலாகும் என்ற அரிய உபதேசத்தை விபூதி அறிவிக்கிறது.

விபூதி திருமண் முதலிய பகவத் சின்னங்களை பக்தியோடு அணிய வேண்டுமே யன்றி அலங்காரத்தைக் கருதி யணியலாகாது. அவற்றில் வாசனை பூட்டி யணியவுங்கூடாது. அவ்வாறுசெய்தால் மிக்க பாதகமுண்டாகும் என்று கூறப்பட்டிருக்கிறது.

இதைப்போலவே நம்முன்னோர் விதித்துள்ள ஏற்பாடுகள் யாவும் நமக்கு அவசியமான முக்கிய பலன்களைக்கருதியே யன்றி வேறில்லையென்று நாம் நன்குணரவேண்டும்.

நம்மதத்தைக் சாராதவர்களுக்கு இவ்வுண்மைகள் தெரியாவாதலால் அவர்கள் இத்தகையனவெல்லாம் அனுவசியமென்று கருதுவது சுபாவமே. இக்காலத்தில் நம்மவரிலேயே சிலர் வீசம் அரைக்கால் ஆங்கிலக்கல்வி கற்றதே "சுட்——இதெல்லாம் வெறும் நான்ஸென்ஸ்" என்று உளறிவிடுகிறார்கள். அந்தோ! இத்தகைய சிறுவர்க்கே முதியோர் நமதுகொள்கைகளிலுள்ள அருமையான உண்மைகளை விளக்கிக்காட்டி அவர்களுக்குச் சரியானபுத்தி புகட்டுவதைத் தாம்கொண்ட கடமையாய் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

(அடியார்க் கடியன்).

---

## ஆத்மாவும், ப்ரஹ்மமும், குரு.

விறகிற் றீயினன் பாலிற்படு நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவுக்கோல் நட்டு உணர்வுக் கயிற்றினால்
முறுக வாங்கிக் கடைய முன்னிற்குமே. (அப்பர்)

ஒருவன் கற்ற வித்தையெல்லாம் அவன்மனதில் தங்கியிருப்பதுபோல் உலகசிருஷ்டிக்குமுன் அண்டாண்ட சராசரங்கள் யாவும் ப்ரஹ்மத்தினிடமாக அடங்கியிருக்கும். மலரும் மலரின் லட்சணமும் கந்தமும்போல் ஒருமைப்பட்டு உண்மை அறிவு ஆனந்தம் என்னும் பொருள் தரும் சச்சிதானந்த சொரூபமாய் விளங்குவதும் *அதுவே. அதுவே அருள், அருளே அது. அதுவும் அருளும் பூவினில் மணமும், மணியினில் ஒளியும் போலுமாம். அஃதைக் காணவேண்டுமானால் அதின் அருளைக்கொண்டே காணவேண்டும். சரீரபலம் ஐசுவரியபலம், உத்தியோகபலம் முதலிய மற்றெதனாலும் காணவொண்ணாது. அது எள்ளுக்குள் எண்ணெய்போலும், பாலுக்குள் வெண்ணெய்போலும் கட்டையில் தீயைப்போலும் எங்கும்வியாபித்திருந்தாலும் அதன் அருள் ஞானவான்களுடைய உள்ளத்தையே ஆலயமாகக்கொண்டு அவ்விடத்தில் ஆனந்தப் பெரும் ஜோதி மயமாய் வீற்றிருக்கும். விருக்ஷம் ஒன்று கிளைகள் பல என்பதுபோல் ஏகமாயிருப்பதும் அதுவே. படைத்தல், காத்தல், அழித்தல் முதலிய செய்கைகளால் பிர்ம்மா, விஷ்ணுசிவன் என்னும் திருமூர்த்தி ரூபமாயிருப்பதும் அதுவே. இவ்வுண்மையை ஆராய்ந்து அறியாதவர்கள் பிர்ம்மன் வேறு, விஷ்ணு வேறு, சிவன் வேறு என்று வீண் குதர்க்கம்பேசி மற்றவர்களையும் சந்தேகிக்கச் செய்கிறார்கள். கடவுள், மோட்சம், நரகம் முதலியன உண்டென்று நூல்களும் கல்வி கேள்வி ஒழுக்கங்களில் சிறந்த பெரியோர்களும் வற்புறுத்திக்கூறி நிற்க, சிலர் இல்லை, யாவும் சுபாவமே என்று மொழிகிறார்களே என்றால் மேல் கண்ட நூல்களும், பெரியோர்களும் பலவகையாய் உரைத்தும் தெரியாதவர்களுக்குத் தெரியச்செய்ய யாரால்முடியும். அவைகள் யாவும் தானே தனக்குள் தேடித் தெரிந்துக்கொள்ளத்தக்கவைகள். ஆதலின் அப்பேர்க்கொத்தவர்களுக்கு உபதேசித்துத் தெரிவிக்கக் காலமும் உள்ளவர்களே உபதேசிக்கக்கடவர்.

---

* இது ஒன்றையே பிரம்மா, விஷ்ணு, சிவன் அல்லது உருத்திரன் என்ற பல நாமத்தால் அழைப்பார்கள்.

ஈசுவர சிருஷ்டியைச் சேர்ந்தவைகளில் ஒரு சிற்றெறும்புதானும் உற்பத்தி செய்தவருடைய ஞானம் வல்லபம் தயை முதலியவைகளை நன்கு உணர்த்துவ தானால் மற்றவைகளைக் குறித்துக் கேட்பானேன். அவை இருளும் ஒளியும் போல்வனவாகிய மாயாலீலை ஞானலீலை என்னும் இரண்டுவகையான லீலைகளை உடையன.

“ அது அசையாமல் அணு அசையாது” ஆட்டுகிறது அது, ஆடுகின்றவை கள் ஆத்மாக்கள். இருவினைக்கயிற்றில் ஆடுகின்ற ஆத்துமாக்களின் ஆயாசத்தைத் தணிப்பதற்காகச் சர்வசம்மாரகாலத்தில் அந்த ஆத்மாக்களைத் தமக்குள் ஒடுக்கிக் கர்மபலத்தைப் புசிப்பித்துக் கதிதரும்பொருட்டாய் மீண்டும் சிருஷ்டிக்கத் திருவுளங்கொள்ளும் காலத்தில் முன்போலவே அனைத்தையும், நிலம், நீர், வன்னி, வாயு, ஆகாயம், சோமன், ஆதித்தன், ஆத்மா, என்னும் எட்டு வடிவங் களாகப்படைத்து அந்த எட்டு வடிவங்களையும் கடந்திருப்பதால், பிரம்மம், அல்லது கடவுள், மாயாலீலர் என்கிற பெயர்கள் வாய்ந்ததாயிக்கிறதென்று பெரியோர் அனைவரும் சொல்லுகிறார்கள்.

மாயை என்பது கானற்சலம்போல் பொய்யை மெய்யாகக்காண்பித்து ஆத் மாக்களை மயக்கும் சுபாவமுடையது. அதனுடைய சுபாவம்சொல்ல யாருக்கும் காலம்போதாது. ஒரு மாங்கொட்டையை நட்டுச் சற்றுநேரத்திற்குள்ளே செடி கிளை அரும்பு மலர் காய் கனிகளைக்காட்டும் கேவலமான ஒரு தொம்பரவன் செய்யும் சாலமே பிடிபடாவிட்டால் அந்த சக்தியுள்ள மாயாசாலம் யாருக்கு விளங்கும் ; இருளானது கண்ணை மறைக்குமேயன்றிச் சூரியனை மறைக்க மாட்டாது. அதுபோல் மாயையானது ஆத்துமாக்களை மயக்குமல்லாமல் பிரம மத்தை மயக்கும் வலியுடையதல்ல ; சூரியோதயகாலத்தில் இருள் இருந்த இடம் தெரியாமல் மறைந்துபோவதுபோல ஆத்மாக்களுக்குப் ப்ரம்மத்தின் அருள் உதயமாகுங்காலத்தில் பகல்காலத்து நட்சத்திரத்துக்கு ஒப்பாக அந்த மாயை இருந்த இடம்தெரியாமல் மறைந்துபோய்விடும். மாயை என்பது ஒன்றே, ஆயினும் அது செய்கை வேறுபாட்டால் ஆணவம், காமியம், மாயை என்று மூன்று வகைப்படும். மகாமாயை திரோதாயிகளைச் சேர்த்து ஐந்து வகைப்படும் என்று சொல்வதும் உண்டு. கார்காலத்தில் சூரியனிடமாகத் தோன்றுகிற மேகம் மின்னல் இடி இந்திரதனுசு மழை ஆகிய ஐந்தும் கோடை காலத்திலே அந்தச் சூரியனிடமாகவே மறைந்து போவதுபோல், ஐந்துவகையா யிருக்கும் மாயையும் சிருஷ்டி காலத்திலே கடவுளிடமாகத் தோன்றிச் சர்வ சம் மார காலத்திலே அவரிடமாகவே மறைந்துவிடும் ஆத்மாவாகிய பசுவைக் கட் டுவதற்கு ஒரு கருவியா யிருத்தலால் மாயையானது பாசம் என்று பெயர் பெற் றுளதாம். சமுத்திரம் உண்டானபோதே சலமும் சலம் உண்டானபோதே உப் பும் உண்டாகி என்றும் இருப்பதுபோல் சுயம்புவாய் விளங்கும் ப்ரம்மமும் ஆத் மாவும் மாயையுமாகிய மூன்று பொருள்களும் என்றும் உள்ளவைகளேயாம். இந்த மூன்று பொருள்களையும் சைவர்கள் பதிபசுபாசம் என்றும் வைஷ்ணவர் கள் சித்து அசித்து ஈச்சுரன் என்றும், வேதாந்திகள் செக சீவ பரம் என்றும்

சொல்வார்கள். தீரத்தெளிய விசாரித்துப் பார்க்கு மிடத்தில் அவையாவும் சொல்மாற்றே யன்றிப் பொருள் மாற்று ஆகமாட்டா என்பது திண்ணம். சமயங்கள் ஒன்றுக்கொன்று சிறப்பு விதிகளிற் பேதப் படுமேயன்றிப் பொது விதிகளிற் பேதப்படாது என்று உய்த்துணர்க.

மாயையை ஏன் படைத்தார் ? மாயையால் ஆத்மாவுக்குத் துன்பம் நேரிடுமென்கிற ஞானம் அவருக்கு இல்லாமல் போயிற்ற ? இல்லையென்றால் அவரைச் சர்வஞானம் உடையவர் என்று எப்படிச் சொல்லலாம் ? மாயையால் ஆத்மாவுக்குத் துன்பம் நேரிடுமென்று முன்னமே அறிந்திருப்பாரானால் அதைப் படைப்பாரா ? அறிந்துதான் படைத்தார் எனில் அவரிடத்தில் அருள் என்பது ஏது ? அருளே அவரது திருமேனி என்பது அடாதே என்று விசாரிக்குமிடத்தில், இராகுகேதுகள் சந்திராதித்தியர்களை மறைப்பதுபோலவும் மாயையானது ஆத்மாவை மறைந்திருப்பதினாலும் அந்த ஆத்மா சிற்றறிவுள்ளதா யிருப்பதாலும் மாயையான வரலாறு தெரிந்துகொள்வது கூடாமை யெனினும், காசம் தீர்ந்த கண்ணேயன்றி அந்தக் காசத்தால் குருடாயிருக்கிற கண்ணனது கண்ணாடியையும் அந்தக் கண்ணாடியால் தன்னையும் கண்டுகொள்ளக் கூடாமையைப்போல் பாசம் தீர்ந்த ஆத்துமாவே யன்றிப் பாசத்தால் மறைக்கப்பட்டிருக்கிற ஆத்மா பரஞானத்தையும் அந்தப் பரஞானத்தால் தன்னையும் தன்னை மறைத்திருக்கிற பாசத்தையும் சற்றேனும் காண வொண்ணாது. ஆதலின் காசத்தால் குருடனாயிருக்கிறவன் அந்தக் காசம் எப்படி வந்ததென்று சிந்தனை செய்யாமல் அதைத் தீர்க்கும் திறமுள்ள வைத்தியனை விரைந்து தேடிக்கொள்ள வேண்டுவதுபோல் ஆத்துமாவும் பாசத்தைத் தீர்த்தருள வல்ல பரம குருவைத் தேடிக்கொள்வதற்கு முயல்வதே தகுதி.

கருணாநிதியாகிய ப்ரம்மம் தமக்குரிய மாயாலீலையால் சகல லோகங்களையும் ஞான லீலையால் தமது சாயலாகவே சகலாத்துமாக்களையும் படைத்து அந்த ஆத்மாக்களைப் பார்த்து, ஆத்மாக்களே, நீங்கள் எம்மை வணங்கியும் தரிசனம் செய்தும் எமது மகிமையைப் புகழ்ந்தும் எம்மையே தியானித்தும் கும்பிட்டுங் கூத்தாடியும் குதூகலமாகப் பாடியும் பணிசெய்தும் பரமானந்தச் செல்வர்களாய் எம்முடைய சந்நிதானத்திலேயே இருக்கக் கடவீர்கள் என்றும், உங்களுக்கு எதிரில் மத்தாப்பு வெளிச்சம்போல் தோன்றி மறையும் தன்மையுள்ள மாயையோடு எவவளவும் சம்பந்தப்படவேண்டாம் என்றும், சம்பந்தப்பட்டால் மீளாத் துன்பத்திற்கு ஆளாவீர்கள் என்றும் வெகுகண்டிப்பாகத் திட்டம்செய்து வைத்தும் அந்த ஆத்மாக்கள் சிற்றறிவின் திறத்தால் தாய்முன் குழந்தையானது தனக்கு எதிரில் நடக்கும் வேடிக்கைகளைப் பார்த்துத் தன்தாயை மறந்து விடுவதுபோல் தங்களுக்குமுன் பலவிசித்திரங்களாகத்தோன்றி நாடகக் கணிகைக்கு ஒப்பாக நடித்துக்கொண்டிருக்கும் மாயா விநோதத்தால் வகைமோசமாய் மதி மயங்கி மலினமடைந்து எக்காலத்திலும் எவ்விடத்திலும் எவ்வளவேனும் யாரும் மறக்க வொண்ணாத மகானுபாவராகிய ப்ரமத்தை மறந்துவிட நேரிட்டது. அவரை மறப்பதைப் பார்க்கிலும் பெரும்பாவம் இல்லை. ஆதலால் அந்

தப் பாவத்தைப் பரிகரித்துக் கொண்டு ஆத்துமாக்கள் தங்களியற்கை நலத்தை யடையும் பொருட்டாகவே பரிசுத்தராகிய கடவுள் அந்த ஆத்மாக்களுக்குத் தனு கரணபுவன போகங்களைக் கொடுத்தருளினர். ஆத்மா சரீரம் எடுத்த காரணத்தை மறந்து நான் எனது எனும் இரண்டுவகையான பற்றுகளுக்கு ஆளாகிப் புண்ணியத்தால் சுவர்க்கம் முதலான பதவிகளில் சுகத்தையும் பாபத்தால் கீழ் ஜென னங்களில் துக்கத்தையும், புண்ணிய பாவத்தால் இந்த பூலோகத்தில் சுகதுக்கத் தையும் தொன்று தொட்டு அனுபவித்து வரலாயிற்று.

இப்படி நெடுங்காலம் சுகதுக்கத்தை அனுபவித்து வருகையில் அறிந்தும் அறியாமலும்செய்து வருகிற புண்ணிய விசேஷத்தால் அதற்கு மெய்யான தெய்வபக்தி உண்டாகும். அந்தச் சத்திய பத்தியானது முற்றிப் பழுக்குந் தோறும் தான்செய்த பாவத்தை உணர்ந்து விசனப்பட்டு வன்னியில் விழுந்த வனைப்போல் துடிதுடிக்கும். கடவுளை நினைந்து நினைந்து கதறும். கண்ணீர் விட்டுக் கலங்கி அழும். விழும். எழும். கைகூப்பித் தொழும். பள்ளங்கண்டு ஓடும் வெள்ளம்போல் ஓடும், ஆடும், பாடும், ஆனந்த பரவசமடையும், அயரும், சிரிக்கும், வெறிக்கும், சரீரம் வியர்க்கும். நாவரட்சி கொண்டவனைப்போல் அதிக ஆவலாய்ச் சாஸ்திர விசாரணைபண்ணும். அதனாலும் தாகம் தணியா மையால் நான்யார் ? என்னைப் படைத்தவர்யார் அவரைக் காணமற் கலங்கச் செய்யும் பாசம்யாது ? அந்தப் பாசத்தை பரிகரித்துப் பயன் அளிக்க வல்ல பரமகுருயார் ? குருவில்லாமல் சாக்கிர சொப்பனம்போல் மாறிமாறி வருகின்ற சனன மரண சாகரத்தைக் கடக்கத்துணிவது கப்பல் இல்லாமல் கடலைக்கடக்கத் துணிவதுபோலும் அன்றோ ? என்று தனக்குள் எண்ணி எண்ணி மனம் புண்ணாகிப் பெருமூச்சு விட்டுச் சற்றேனும் தாமதியாமல் விரைந்து எழுந்து வண்டு தேனைத்தேடி திரிவதுபோல் தேசமெங்கும் சற்குருவைத் தேடித்திரியும் பெண்டுபிள்ளைகளை வெறுக்கும். பக்தியில்லாதவர்களைக் கண்டால் பயப்படும் பக்தியுள்ளவர்களைப் பார்த்தால் பார்த்தவுடனே ஊசிகாந்தத்துடன் சேர்ந்து கொள்வதுபோல் அவர்களுடன் சேர்ந்துகொள்ளும்.

[குறிப்பு:—பிரம்மம், ஆன்மா, மாயை அல்லது பதி பசு பாசம் என்ற முப்பொருள் பேதமாயுள்ள நிலை அனாதியெனினும், அஞ்ஞான நிலைமையில் என்று மிருக்குமேயன்றி, முத்தி நிலையில் இராவாதலால் (அனாதியாயினும்) அநித்தியமேயாம் பிரம்மம் ஒன்றேயென்றுமுள்ள நித்தியப் பொருளாம். ப-ர்.]

---

## " நான் யார் ?"

நான், நான், என்று சொல்லிக்கொள்வது, பிரிதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், எனும் இப்பஞ்சரூபங்களால் ஒன்றாக்கப்பட்டிருக்கும் இப்புன்புலால் யாக்கையே நான் என்று அநேகரால் விவகரிக்கப்படுகின்றது. நான் உண்கிறேன், நான் பேசுகிறேன், நான் சிரிக்கிறேன், என்று சொல்லுவதெல்லாம் நான் என்ற இச்சொல் சரீரத்தையே குறிப்பிட்டாலும் என்னுடையகண், என்

னுடைய மூக்கு, என்னுடைய சரீரம் என்பவைகளிலிருந்து இவைகள் உடமைகளாகவும் நான் என்பதை வேறுபடுத்தி வியவகரித்துக்கொள்ளுகிறது. இதனுல் சரீரம் வேறு நான் வேறு என்று வியக்தமாய்த் தெரிகிறது. மனதை நான் என்று அபிமானிக்கலாமோ என்ருல், என்மனம் பேதளிக்கின்றது என்பதனுல் மனமும் நான் அன்று. இங்ஙனம் என் அறிவு கெட்டுப்போனது. என்று 'நான்' என்பது உடையவனுகவும் அறிவை உடமையாகவும் வேறு படுத்திக் கூறுகின்றதன்ருே? ஆகவே அறிவு நான் அன்று. என் பிராணன் போகின்றது என் சுகம் கெட்டுப்போய்விட்டது, என்று இவ்விதமாக ஆருயச் சொற்களைச் சொல்லும்போது 'நான்' என்பது உடையவனுகவும் பிராணன் சுகம் முதலியவைகள் உடமைகளாகவும வேறுபடுத்தியே பேசப்படுகின்றன.

'நான்' என்பது எல்லோரிடத்திலுமிருக்க, ஆத்மாவையோ, மனதையோ, ஆக்கையையோ, 'நான்' என்பது வித்தியாசப்படுவானேன்? தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம், முதலானவைகளிடத்திலும் 'நான்' என்பது பிரகாசிக்கின்றது. ஆகையால் நான் சர்வவியாபகமாயிருக்கிறது.

நானே க்ரது, நானே யஞ்யம், நானே ஸ்வதா, நானே ஔஷதம், நானே மந்திரம், நானே ஹவிஸ், நானே அக்நி, இந்த ஜகத்திற்குத் தகப்பனும், தாயும், பகிர்ந்து கொடுப்பவனும் பாட்டனும் அறியவேண்டிய பொருளும், பரிசுதத மாக்கும்பொருளும், ஓங்காரமும் ருக்கும் சாமமும், யஜுரும் நானே தான்.

கதியும், வளர்ப்பவனும், பிரபுவும், ஸாக்ஷியும், வாழுமிடமும், புகலிடமும், ஸுஹிருதமும், உத்பத்தியும், அழிவும், நிலேயும், களஞ்சியமும், அழிவிலாவிதையும் நானேதான்.

நான் சகல பிராணிகளினுடைய ஹிருதயத்திலுள்ளவன். நான் பிராணிகளுக்கு முதலாகவும், நடுவாகவும் முடிவாகவுமே உள்ளவன் என்னைத் தவிர வேறு இல்லவே இல்லே, சத்தியம், என்று "பகவத்கீதை" கோஷிக்கின்றது.

விஷ்ணுவானவர் தசாவதாரம் எடுத்ததாக நூல்களறைகின்றன. அதில் கிருஷ்ணுவதாரம் கடைசியானது. இவ்வவதாரத்தில் அருச்சுனனுக்கு எல்லாம் 'நானே' என்று உபதேசித்திருக்கிருர், கீதையை "ஆழ்ந்து ஆராயப்புகின் "நான்" எனும் பொருள் நாமரூபமற்றதா யிருப்பதாக வியத்தமாய் சொல்லியிருக்கிருர். ஆனதால், விஷ்ணுவையும் நாமமிட்டு அழைப்பதற்கும் அசம்பாவிதமாயிருக்கிறது. இஃதைப்போன்று, சிவன், பிர்மா, கிறிஸ்து, மகமது, முதலானவர்களேயும் ஆராயப்புகின் அந்நாமமுடையவர்களன்று, சகலமும் ஒன்றே என்று "உள்ளங்கை நெல்லிக்கனி" போன்று பஹிரங்கமாய்க் கோஷிக்கின்றன.

தாயுமான சுவாமிகள்கூட நான் என்பதை சிவனென்று அழைக்கலாமா, விஷ்ணுவென்று அழைக்கலாமா, பிர்ம்மாவென்று அழைக்கலாமா, கிறிஸ்து வென்று அழைக்கலாமா, மகமது என்றுதானழைக்கலாமா, அல்லது வேறு எந்த நாமமிட்டு அழைக்கலாமென்று ஆராய்ந்து அழைப்பதற்கு முடியாதவராய்,

அங்கிங்கெனாதபடி யெங்கும்ப்ரகாசமா
யானந்த பூர்த்தியாகி
அருளொடு நிறைந்ததெது தன்னருள் வெளிக்குளே
அகிலாண்ட கோடியெல்லாம்
தங்கும்படிக்கிச்சை வைத்துயிர்க்குயிராய்த்
தழைத்ததெது மனவாக்கினில்
தட்டாமனின்றதெது சமய கோடிகளெலாம்
தந்தெய்வ மெந்தெய்வமென்
றெங்குந்தொடர்ந்தெதிர்வழக்கிடவு நின்றதெது
வெங்கணும் பெருவழக்காய்
யாதினும் வல்லவொரு சித்தாகி யின்பமா
யென்றைக்கு முள்ளதெதுமேல்
கங்குல்பகலறநின்ற வெல்லையுள தெதுவது
கருத்திற் கிசைந்த ததுவே
கண்டெனவெலாமோன வுருவெளியதாகவுங்
கருதியஞ்சலி செய்குவாம்.

என்ற பாடலை கானம் செய்துள்ளார். இப்பாடலில் 'நான்' எனும் பொருள் கருத்திற் கிசைந்ததென்றுமட்டும் புகன்றுளர்.

ஓர் ஊரிலே (Nothing Lord) "ஒன்றுமில்லாதபிரபு" என்ற நாமத்துடனிருக்கிறொருவர். அன்னவரைச் சந்தித்து 'நான்' என்பது என்ன, என்று ஆராயப்புகுந்ததில், இப்பூவுலகில் என்ன இருக்கின்றது (Nothing in it) ஒன்றும் இல்லை. ஆனல் (Nothing) ஒன்றுமில்லை என்று சொல்லக்கூடிய தொன்றுண்டல்லவா, அதுமட்டும்தான் உண்மைப்பொருள், அஃதேதான், 'நான்' என்ற ரஹஸ்யப்பொருள். அஃதைத் தரிசித்தவர்கள் "ஊமையன் கண்டகனவு" போல் வெளியிலொன்றும் சொல்லிக்கொள்ளார்கள். அஃதைக் "கண்டவன் விண்டிலன் விண்டவன் கண்டிலன்" என்ற விதமாயிருப்பார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. இம்மகானுடைய சிஷ்யர் இருவருளர். அன்னவர்களும் (Nothing in it) தெரிந்துகொள்ள வேண்டியது ஒன்றுமில்லை. எல்லாரும் தெரிந்தவர்கள், எல்லாரும் மோட்சர்கள் எல்லாரும் (Nothing) ஒன்றுமில்லாதவருடைய சேய்கள். 'நான்' என்பதைக் காண்பது அதிகசுலபமானதென்றும் அஃதை தெரிசித்தவன் சதாஆனந்தத்திலேயே இருப்பானென்றும் புகன்றுளர்.

ஆனதால் "நான்" என்பதை கருத்திற் கிசைந்ததென்று உரைக்கத் துணிந்துளோம்.

---

## "இறந்தாலும் பொய்தன்னைச் சொல்லவேண்டாம்."

பொய்பேசுவது பஞ்சமஹாபாதகங்களுள் ஒன்றெனச் சாஸ்திரங்களிற் சொல்லப்பட்டிருக்கிறது. கொலை, களவு, பொய், கள், காமம் ஆகிய இவ்

வைந்தும் பஞ்சமஹாபாதகங்க ளெனப்படும். நமது மாணவர்களிற் பெரும் பாலார் எவ்விஷயத்திற்கும் அபத்தங்களை மொழிகின்றனர். இஃது அவர்கள் மேலுள்ள குற்றமல்ல. வீட்டில் பெற்றோர்கள் நடக்கையும் பள்ளியில் உபாத்தி யாயரின் குணங்களுமேதான் குழந்தைகள் பழகுவார்கள். ஆகையால் ஸன் மார்க்கங்களும், மற்றுள்ள நன்னடக்கைகளும் குழந்தைகளிடம் அமையப்பெற விரும்பும் பெற்றோர்கள் தாம் அவ்வழியில் நடந்துகாட்டிக் குற்றங் கண்டபோ தெல்லாம் சீர்திருத்தி வரவேண்டும். பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயர் வசம் பகலெல்லாம் கற்க ஆரம்பிப்பதால் உபாத்தியாயர் தமது பாடங்களுடன் உண்மை, தெய்வபக்தி, தருமபுத்தி, பரோபகாரம், தயாளகுணம் முதலிய நன்னடக்கைகளைச் செவ்வையாய் ஊட்டிவரவேண்டும். உபாத்தியாயரிடத்திலும் மேற்கண்ட நற்குணங்கள் இன்றியமையாதவை. "பாரத யுத்தம் நடப்பதற்கு முன் பஞ்சபாண்டவர்கள் சூதாடி நாடுநகர முதலியவைகளைத் தோற்று வன வாசம் பன்னிரண்டு வருஷம் செய்தபின் அக்யாதவாஸம் ஒருவருடமும் கழிந்த பின்னர் பாண்டவர்கள் தங்களுக்குக் கிடைக்கவேண்டிய பாதி ராஜ்யத்தைக் கௌரவர்களிடம் கேட்டனுப்ப அவர்கள் கொடுக்கமாட்டோமென்று மறுத்து விட்டார்கள். கடைசியில் ஐந்து கிராமங்களாவது, ஐந்துவீடுகளாவது, கொடுக் கும்படி கேட்டார்கள். ஒன்றும் கொடுக்கமாட்டோமென்று சொல்லிவிட்டார் கள். ஆனால் யுத்தம் செய்யவரும்படியாக சொல்லியனுப்ப, துரியோதன னாதியர். அதற்கிசைந்து தங்கள் பாட்டனாரான பீஷ்மரை யுத்தம்செய்ய ஆரம் பிப்பதற்கும், எதிரிகள் சாவதற்கும், தாங்கள் ஜயமடையவும், நல்லநாள் ஒன்றை நிர்மித்துக்கொடுக்கும்படி துர்யோதனன் வேண்ட, அப்பா உன் தம்பி ஸஹா தேவன் ஜோஸ்யத்தில் கெட்டிக்காரன் அவனைப்போய்க் கேட்பாயாகில் உனக் குகந்தநாள் ஏற்படுத்திக்கொடுப்பான் என்று சொல்ல, துர்யோதனன் அதற்கு, "யாராவது தான்சாக மருந்துகுடிப்பார்களா" சஹாதேவன் அப்பேர்ப்பட்ட நாள் பார்த்துக்கொடுப்பானா என்று கேட்க, அதற்கு பீஷ்மர் அவன் ஸத்யவான் தலைபோனாலும் பொய்சொல்லான் என்றார். அதுகேட்டு துர்யோதனன் உடனே அர்த்தராத்ரியில் சகாதேவனிடம் வந்து உங்கள் தலை அற்றுவிழும்படி யாகவும் நான் ஜெயம் அடையவும் ஒருநாள் நிர்ணயித்துக்கொடு என்று கேட்க சகாதேவன் வணக்கத்தோடு எழுந்து சாஸ்திர ஆராய்ச்சிசெய்து தங்கள் தலை அற்றுவிழும்படியான நாளொன்றை நிருமித்துக்கொடுத்தான். தன் தலை போனாலும் போகட்டும் பொய்சொல்லக்கூடா தென்றிருந்ததால் தெய்வாதீன மாய் அந்நாள்மாற துர்யோதனாதியர்கள் மடியவும், பாண்டவர்க்கு இழந்த ராஜ் யங்கள்வந்து கைகூடவும் இம்மையில் அடையக்கூடிய இன்பங்களையடைந்து மோக்ஷஸாம்ராஜ்யத்தை அடைந்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆகையால் பிள்ளைகள் எப்போதும் உண்மையையே உரைக்கும்படி தூண்டப்படவேண் டும். "ஸத்யமேநித்யம் தர்மமே ஜயம்."

## “வஞ்சகம் பேசேல்”

கபட வார்த்தைகளைச் சொல்லாதே என்பது இதன்பொருள். ஒவ்வொருவனுக்கும் மனது, வாக்கு, காயம் என்ற கரணங்கள் மூன்று உண்டு. இம்மூன்றும் பெரியோருக்கு ஒரே மாதிரியாகவே யிருக்கும். ஆனால் சிறியோருக்கு இம்மூன்றும் வேறுபடும். “வஞ்சகம் பேசேல்” என்ற நீதிவாக்கியத்தால் மனதும் வாக்கு மொருப்பட விருக்கவேண்டு மென்பது பெறப்படுகிறது. இவ்விரண்டு மொன்றாக விருக்குமாயின் காயமும் அவ்விதமே யிருக்குமென்பது வெளிப்படை. மனது களங்கமின்றி யிருக்குமாயின் வாக்கும் அவ்விதமேயிருக்கும். ஒரு காரியத்தை மனதால் நினைத்து வாயால் வெளியிட்டுக் காயத்தால் செய்யவேண்டும். மனதும் வாக்கு மொன்றுபோ லிருக்குமாயின் செய்கையும் அத்தன்மையாகவே யிருக்கும்.

மனதில் ஒன்றை எண்ணிக்கொண்டு வாயால் அதற்கு மாறானதைச் சொல்லாதே; அதாவது வாயால் வெளிப்படையாகக் கூறக்கூடியவைகளை மனதில் நினைத்து வரவேண்டுமேயொழிய வெளியிடத் தகாத கெட்டவைகளை மனதில் வைத்துக் கொண்டிராதே என்பதாயிற்று.

கசந்த மனத்தையும், தித்திப்பான வாக்கையும் மேற்கொள்ளக் கூடாது. மனதில் கெட்ட எண்ணத்தை வைத்துக்கொண்டு நல்லவன்போல நடிக்கவே கூடாது. ஆனதுபற்றியே “உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்” என அறிவுடையோர் ஒருவர் கூறியிருக்கின்றனர். இவ்விதம் பிறரொருவருடைய உறவு வேண்டாம் என்று கூறியிருக்குஞ் சமயத்தில் நாமே மனதிற் கெட்ட எண்ணத்தை வைத்துக்கொள்ளலாகாது. ஆனால் மனதில் கெட்ட எண்ணம் வந்துவிட்டால் அதை வெளியிட்டு விடுவது வஞ்சகம் பேசாமை உள்ளடங்கவே மாட்டாது. “மனதில் தோன்றும் கெட்டவைகளை நான் வாயால் உளறிவிடுகிறேன். உள்ளே வைத்துச் சிரித்துப் பேசுவதில்லை. நான் நிஷ்கபடி; வஞ்சகம் பேசாதவன்” என்று சிலர் பெருமை பேசிக்கொண்டு வாயால் கூறமுடியாத சில விஷயங்களை வாயோயப் பிதற்றுவதைநாம் காணலாம். இவர்கள் இந்நீதி வாக்கியத்தின் கருத்தை யுணராதவர்கள். “கெட்ட எண்ணங்களை நல்ல வாக்கியங்களால் மறைத்துக் கூறாதே” என்ற கருத்து இதினின்றும் வெளிப்படுகிறது. அதனால் கெட்ட எண்ணங்களை உள்ளபடி வெளியிடவேண்டுமென்று எப்படியாகும். இந்த நீதியை உடன்பாடாக மாற்றிப்பார்க்குங்கால் அநேகவித மாற்றங்கள் ஏற்படும். அவைகளுள் மற்ற நீதி வாக்கியங்களுக்கு மாறுபாடில்லாத மாற்றத்தையே கைக்கொள்ள வேண்டும். கெட்டவைகளை உள்ளபடி வெளியிடு என்றும் நேரே கூறக்கூடியவைகளை நினை என்னும் உடன்பாட்டு மாற்றத்திற்குப் பொருள். பிரயோஜனமற்ற சொல்லை சொல்லக்கூடாதென்பதும், திரிகரண சுத்தியாக விருக்கவேண்டுமென்பதும் பொது நீதிகள். ஆகையால் இவ்வுடன் பாட்டு வாக்கியத்திற்கு “நேரே கூறக்கூடியவைகளை நினை” என்றே பொருள் கொள்ளவேண்டும். அப்படி மறைக்கவேண்டியவைகளை எண்ணிவிட்டால் வஞ்சகமாகவே பேச

இடந்தராது மௌனமாக விருந்து அதை உள்ளேயே வேரறுத்துவிட வேண்டும். அதை விட்டு அந்த எண்ணத்தை உள்ளபடி வெளிவிட்டுவிட்டால் வஞ்சகம் பேசாத நிலேயும் ஏற்படாது மனதை அடக்கத் திறனற்ற பாபியுமாகி விடும்படி நேரிடும்.

எக்காரியத்திற்கும் ஒரு எல்லேயுளது. அதுபோலவே வஞ்சகம் பேசாதிருக்க ஒரு எல்லேயுண்டு. உள்ளக் கருத்தையே எப்பொழுதும் கூறிவிட முடியாது. ஒரு எண்ணம் நல்ல எண்ணமாக விருந்தபோதிலும், அவ்வெண்ணத்தை வெளியிட்டால் அந்நன்மை பயவாது என்று ஒரு உறுதி இருக்குமாயின் அதை மறைத்து நன்மை உண்டாக்க முயலவேண்டும். முக்தியை மனிதர்க்கு அளிக்க வந்த வேதம் ஆடுகாட்டி வேங்கை பிடிப்பதுபோல முதலில் பலன்தருங் கர்மங்களேச் செய்யத்தூண்டிப் பின்னர் அவைகளே விட்டுவிடுவதற்கு வேண்டிய வழிகளேக் காட்டுகிறது. கசப்பு மருந்தைக் கொடுத்துக் குழந்தை நோயைத தீர்க்க முயலும் தாய் அது சர்க்கரையென்று மறைத்துக் கூறி சிற்சில ஸமயங்களில் சர்க்கரையுடன் கலந்தும் அதைக் கொடுத்து விடுவது வழக்கம். அதுபோலவே சில காரியங்கள் முடியும் வரையில் சில மறைப்புச் சொற்கள் கூறவேண்டிவரும். அச்சமயங்களில் மறைத்துக் கூறியே தீரவேண்டும். ஒருவன் நம்மை நமக்கு இஷ்டமில்லாத விடத்திற்கு கூட்டிப்போக வருவானுயின் 'வர இஷ்டமில்லே' என்று நேரே கூறமுடியாது 'எனக்கு உடம்பு ஸரியாகவில்லே' என்று கூறி ஒதுங்கவேண்டி வரும். மேலும் ஒருவன் குற்றங்களே அவன் முன் மறைக்காமல் சொல்லவேண்டும். இதுபற்றியே "போகவிட்டுப் புறஞ்சொல்லலாகா" தென்று கூறியுள்ளார்.

ஆனல் ஒருவனுடைய நற்குணங்களே அவன் முன் நேரேகூருது அவனுக்குப் பின் விஸ்தாரமாகக் கூறவேண்டு மென்பது நீதி. இப்படி அநேக விடங்களில் வ்யவஹாரத்தில் வஞ்சகம் பேசவேண்டியது அவசியமாகி விடும். ஆதலால் வஞ்சகம் பேசுவது உள்ளதை மறைத்துப் பேசுவது மாத்ரம் லக்ஷணமல்ல. பொதுத்தீமை பிறர் கஷ்டத்தால் தனக்கு நன்மை என்ற இப்பேற்கொத்த எண்ணங்களும் வஞ்சகத்திற் குட்பட்டதே. இவைகள் சம்பந்தப்படாத மறைப்புச் சொற்கள் வஞ்சகச் சொற்கள் அல்ல. ஆகவே, 'வஞ்சகம்பேசேல்' என்றல் கெட்ட எண்ணங்கொண்டு உள்ளதை மறைத்துக் கூருதே. கெட்ட எண்ணம் வந்து விட்டால் மௌனமாக விருந்து அவைகளே வேரறுக்கப் பார் என்பதே.

'வஞ்சகம் நெஞ்சைப் பிளக்கும்' என்ற ஆன்றேர் மொழி வஞ்சகத்தால் வருங் கெடுதியை விளக்குகிறது. வஞ்சகம் ஒருவனே அடுத்தாரைக் கெடுக்கச் செய்யும். உறவினரை விரோதப்படுத்தும். இவை தவிர வஞ்சக நெஞ்சுடையவன் அழிவது திண்ணம் இவ்வித வஞ்சகம பேசி கஷ்டம் அடைந்தவர்கள் பலர். யாதவர்களுக்கு மரணம் வந்தது ரிஷிகளிடம் வஞ்சகமாகப் பேசியதால் தான். ஆகையால் 'வஞ்சகம் பேசேல்' என்ற முதியோர் மொழியை எக்காலத்தும் நமது மனதில் வைத்து வஞ்சகம் பேசாமல் காலங்கழிப்போமாயின்

நமக்கு எப்போதும் சந்தானமும் பொருளும் விருத்தியடையும் என்பது அறிவுடையோர் கூற்று.

---

## தமிழ்ச் சிறப்பு.

(329-வது பக்கத்தொடர்ச்சி)

இனி, தற்காலத்தில் தமிழும் ஆங்கிலமும் இருக்கிற ஒற்றுமையைப்பற்றி முன்னே வெளிவந்திருப்பதால் அதைப்பற்றிப் பேசாது, விடுத்தலே நலம்.

தமிழ்பாஷையின் காலவர்த்தமானம் எட்டுபிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. முதலாவது,

1. அபோதகாலம்—இது தமிழ்பாஷை வரிவடிவு இல்லாமல் ஒலிவடிவில் மாத்திரம் இருந்தகாலம்.

2. அட்சரகாலம்—அதற்கு எழுத்துக்கள் ஏற்பட்டகாலம்.

3. இலக்கணகாலம்—இது அதற்கு இலக்கண மேற்பட்டகாலம். ஆதியில் சப்தவடிவாயும், பின் வரிவடிவாயும் எழுந்த தமிழ்மாதுக்கு அகத்தியர் முதலியோர் இலக்கண முதலிய நூல்களையியற்றி அவளை அணிபெறச்செய்து மகிழ்ந்தனர்.

4. சமுதாயகாலம்—இது முதல், இடை, கடை என்னும் முச்சங்கத்தார் காலமுங்குறிக்கும். இக்காலத்தில் இயற்கை யழகோடு செயற்கை யழகும் பெற்ற தமிழ்மாது மதுரைச்சங்கமாம் நாயகனைமணந்து சீரும் சிறப்பும் உற்றனள். இச்சங்கத்தார் அநேகமான நூல்களையியற்றித் தமிழை மேன்மேலும் சிறப்பித்தனர். இதுதான் தமிழ்பாஷை உன்னத நிலை யடைந்தகாலம்.

5. அனுதாரகாலம்—இது தமிழ்பாஷை ஆதரவற்றுத் தன் சிறப்பு குன்றியகாலம். அதாவது மதுரையின் கண்ணே யிருந்த சங்கம் கபாடபுரத்துக்கு மாற்றப்பட்டது. கபாடபுரம் சமுத்திரத்தினுல் அழிவெய்தவே அரிய பெரிய தமிழ்நூல்கள் யாவும் இறந்தன. இதினின்றும் தப்பியநூல்கள் மிகச்சிலவே.

6. சமணகாலம்—இக்காலத்துச் சில சமணவித்வான்கள் தமிழிலே சிறந்ததெனக் கருதப்படும் ஜீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலான பெருங்காப்பியங்களையும், சூளாமணி, நீலகேசி யசோதர காவியம் என்னும் சிறு காப்பியங்களையும், நிகண்டு நன்னூல் முதலியவைகளையும் இயற்றினூர்கள்.

7. இதிகாசகாலம்—இக்காலத்தில் கல்விச்செல்வரான கம்பர் ஒட்டக்கூத்தர் முதலிய கவிவாணரும், சைவசமய பரமகுரவர் நால்வரும், சந்தான சாரியார்களும் தோன்றி புராணகாவியங்கள், சமயாசார தத்வநூல்கள் முதலியவற்றையும் பிறநூல்களையும் இயற்றுவாராயினர். இவ்வாறு சிறப்பெய்திய தமிழுக்கு பின்னுமொரு விபத்துநேர்ந்தது. தென்னிந்தியாவில் ராஜ்யவிஷயமாக யுத்தம் நடந்தகாலத்தில் அநேக தமிழ்நூல்கள் வெந்து சாம்பலாயின. அவற்றிற்குத் தப்பியவை இலக்கண இலக்கியநூல்கள், ஸ்தலபுராணங்கள், தேவார திருவாசகங்கள் முதலியனவும் சில கணிதசோதிட சாஸ்திரங்களுமே.

8. ஆதீனகாலம்—இக்காலத்தில் மடாதிபதிகளாலும் அவர்கீழுள்ள தமிழ் வித்வான்களாலும் சிலநூல்கள் இயற்றப்பட்டன. தர்க்கவியாகரண நூல்களாய் நமக்குள்ளவை பெரும்பாலும் இக்காலத்தவைதான். இப்படி மிஞ்சிய நூல்கள் பனையோலைச் சுவடிகளிலிருந்தன. அவைகளில் சிலவற்றைச் சில வித்வசிரோமணிகள் அச்சிட்டு உயிர்ப்பித்தார்கள்.

இன்னும் தமிழ்மொழி, இயல், இசை, நாடகம் என மூவகையாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அவைகளில் இயற்றமிழ் என்பது தமிழர் யாவரிடத்திலும் இயங்குகிற வசனமும் செய்யுளுமாகும் நூல்களின் கூட்டம். இதில் இலக்கண இலக்கியங்கள் யாவுமடங்கும்.

இசைத் தமிழ் என்பது பண்ணோடு கலந்தும் தாளத்தோடு கூடியும் வழங்குகின்ற பாட்டுகளாகிய இலக்கியங்களும் அவற்றின் இலக்கணங்களும் ஆகிய நூல்களின் தொகுதி. அதில் கீர்த்தனம், வரிப்பாட்டு, சிந்து, ஆனந்தக் களிப்பு, கும்மி, தெம்மாங்கு முதலியன யாவும் அடங்கும். ஆனால் தாளமில்லாமல் இராகத்தோடு மட்டும் இசைத்துப்பாடப்படும் பாடல்கள் இயற்றமிழேயன்றி இசைத்தமிழல்ல. ஆதிகாலத்தில் வழங்கிய பெருங்குருகு, இசைநுணுக்கம், முதலியனவும், இக்காலத்தில் உலாவுகின்ற கந்தபுராணக் கீர்த்தனை, பெரிய புராணக் கீர்த்தனை முதலியனவும் இசைத்தமிழாம்.

நாடகத்தமிழ் என்பது கையில் நூலெடுத்துப் படிப்பதற்கு அவகாசமில்லாத வேலைக்காரர்களுக்கும் படிக்கத்தெரியாதவர்களுக்கும் நல்லறிவு புகட்டுமாறு வகுக்கப்பட்டது. உலகத்தின் இயல்பினை உள்ளதை உள்ளபடி காட்டுவது நாடகத்தமிழ் ஒன்றே. இயலும் இசையும் கேள்வி யின்பம் மாத்திரம் கொடுக்கிறது. நாடகத்தமிழே கேள்வி யின்பமும் காட்சி யின்பமும் பயக்கின்றது.

இனி தமிழின் தற்கால நிலைமை மிகவும் பரிதாபப்படத்தக்கது. பண்டைக் காலத்தில் இத்தனைபெருமை வாய்ந்திருந்த நம் சுயபாஷை தன் பழையசிறப்பை யடையுமாறு செய்வது ஒவ்வொரு தமிழரின் கடமையாகும்.

---

## கீழ்ப்படிதல்.

அருந்தமிழறிந்த பெரியோர்காள்!

இக்கண்ணகன்ற ஞாலத்தின் கண் ஓரறிவு முதலையறிவீறாயுள்ள ஜீவகோடிகளுள், மானிடப்பிறவியே சிறந்ததாகும். ஏனெனில், எல்லாவற்றைக் காட்டிலும் பகுத்தறிவு என்பது விசேடமாயுள்ளது. பகுத்தறிவாவது—இன்னது நாம் செய்யக்கூடிய கருமம் இன்னது விலக்கத்தக்க காரியமென வோரறிவுண்டாவதே யாகும். அப்பகுத்தறிவில்லாவிடின் மிருகமேயாவர் மானிடரும். அவ்விலங்கும் மனுநீதிவழுவாது நடாத்திவருமாயின் அதுவும் மனிதனாகும். நாம் மானிடப்பிறப்பெடுப்பது கடவுளது பணிவிடைக்கே. ஆதலாலேயே கடவுள் நமக்குக் கால்கை முதலிய அவயவங்களைக் கொடுத்தருளினர். இப்படியிருக்க அக்கடவுளதுகருணையை யுணராது அனேகர் "நானென்றும் என்னுடையது" என்றுந், தானென்னுங் கர்வத்தைக்கொண்டு மயக்க வலையிலகப்

பட்டுத் துன்புறுகின்றனர். அந்தோ ! அக்கடவுளது கருணையைநோக்கின் பகர்தற்காதிசேடனும் எழுத ஹைகயதேசத் தாசனுங் கண்ணுறுவதற்கு மாரீசர் குமாரனுகிய இந்திரனும் சற்றுச் சிரமப்படுவரெனின் அற்பமதியுடைய அடியே னுக்கு எங்ஙனங்கூடும். ஆதலால் நமது கண் முதலிய வைம்பொறிகளையும் ஏனையவ அவயவங்களையும் கடவுளது கருணைக்குப் பாத்திரமாகிய காரியங்களை யே செய்யும்படியேவவேண்டும். இதுநோக்கியே "தலையேநீவணங்காய்" என் பதை முதலாகவுடைய திருவங்கமாலை யென்பதை அருளியுள்ளார் அப்பர் சுவாமிகள். ஆகையினுல் இங்ஙனம் புந்தியைச் செலுத்துவதற்குக் "கீழ்ப்படிதல்" என்னுங் குணமே யேற்றதாயுள்ளது. ஆதலின் அநநற்குணத்தைப்பற்றிச் சிறிது மொழிவோம்.

கீழ்ப்படிதலாவது தங்களுக்கு உயர்ந்தவர்களிடத்திலும் பிறரிடத்திலும் அவர்கள் கட்டுரைப்படி நடந்து தாழ்ந்திருத்தல். இஃதோர் பெரிய நற்குண மாகும். இது யாவரிடத்தும் அமையத்தக்கது. இதை நம்நாட்டின்கண் அவதரித்த கலைமகட் கூருன ஔவைப் பிராட்டியார் கூறியுள்ள "கீழோராயினுந் தாழ வுரை" என்னும் பழமொழியை யுற்றுநோக்கின் நன்குவிளங்கும். இந்நற் குணத்தைப்பெறச் சாதுக்களிடஞ் சேரவேண்டும். துட்டரிடஞ் சேருவோ மாயின் தீமையேபழகும். நிற்க,

நாம் கல்வி கற்றல் மிக்க வின்றியாமையாதது. இதற்கு இக்குணமில்லா விடின் கலைமகள் வெறுப்படைவாள். இக்கலைமகளுக்கிருப்பிடமான வாசிரிய ரும் கோபமுற்று வெறுப்படைவர். அன்றி நாம் கீழ்ப்படிந்து நடந்தோமாகில் பாடங்களை நன்ருகச்சொல்லி ஆசீர்வாதம் முதலியனவுஞ் செய்வர். அதனுல் மிகுந்த ஞானமுடையவனுய்ச் சுகமடையலாம். இங்ஙனங் கற்றபிறகு "கற்க கசடறக் கற்றபின் நிற்கவதற்குத்தக" என்று கூறிய நாயனுர் வாக்கியப்படி நடக்கவேண்டும். கற்ற நூல்களில் கூறியுள்ளதே வீடுபெறுவதற்குச் சாதக மாகிய கடவுளைச்சிந்தித்து வணங்கவேண்டுமென்பதே. ஆதலில் கடவுளைச் சிந்திக்கவேண்டிய தவசியமாகும். அங்ஙனங் கடவுளைச் சிந்தித்து வீடுபெறுவ தற்கு அக்கடவுளிடம் கீழ்ப்படிந்து நடத்தலல்லாமல் வேறு வழியில்லை. இவ் வாறு கூறியதற்குமாருக ஒருவனிருப்பனே யாகில் அவனே நாஸ்திகனுவன். அவன் நரகடைவன். இன்னும் அரசனுக்கும் கீழ்ப்படியவேண்டும். ஏனெனில் உலகில் அரசன் கடவுளுக்கு இரண்டாவதாய் துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனம் செய்துவருகின்ருன். ஆகையால், இராஜபக்தி யவசியம்வேண்டுமென்பது திண் ணம். இங்ஙனமில்லாவிடினும் "அரசனன்று கொல்லுந்தெய்வம் நின்றுகொல் லும்" என்பதற்காவது கட்டுப்பட்டே நடக்கவேண்டும். மேலும் மண்ணுலகி லர சன் மகாவிஷ்ணுவினம்சமாதலால் அவனையிகழ்ந்து வீடுபெற வெண்ணினே மாயின் விண்ணிலும் கடவுள் நம்மை மண்ணிலிகழ்ந்தவன் என வெறுத்துவிடு வார். பின்வீடு பெறுவரிதேயாகும். இன்னும் தாய்தந்தையர்களுக்கு முதலிலிக் குணத்தைக் காட்டவேண்டும். ஏனெனின் அவர்கள் நாம்பிறந்து வளரமிகுந்தகஷ் டப்பட்டார்களென்பது யாவருமறிந்ததே. இதையே நம்மூதாட்டியார் "அன்

ளையும் பிதாவும் முன்னறிதெய்வம்" "தந்தைதாய்ப்பேண்" "தந்தைசொன் மிக்கமந்திரமில்லை" என்றும் பற்பலவிடங்களிற் பகர்ந்துளார். கீழ்க்கூறி யோர்களுக்குக் கீழ்ப்படியவும் தாய்தந்தையரே முதற்காரணமாதலால் அவர்கள் முதலில் முக்கியமாய் கீழ்ப்படியத் தகுந்தவர்களாவார்கள். பிறருக்கு மப்ப டியே. நிற்க, இனிஇஃதுணர்ந்து நன்மையடைந்தோர்களும் உணராமல் தீமை யடைந்தோரும் மிக்க உளரெனினும் சிலரை வரைகின்றேன். முன் தங்க ளுள் வயதுமுதிர்ந்தவராயும் அறிவிற் சிறந்தவராயுமுள்ள தருமருக்குக் கீழ்ப் படிந்து பீமன் முதலிய நால்வரும் மிகுந்த புகழ்பெற்றுச் சுகமடைந்தனர். தங் கள் குலத்திற்கே குருவாயுள்ள வசிட்டமுனி கூற்றைக்கேட்டு இராமனை விசு வாமித்திரர்கூட அனுப்புவித்து தாம் தேடியும் கிடைக்கரிதாகிய மருமகளையும் புகழையும் குருவி னனுக்கிரகத்தையு மடைந்தனர். உலகநாயகராகிய இரா மரூந் தாய்தந்தையர்கள் சொற்கேட்டுக் கானஞ்சென்று அரக்கர்களைக் கொன்று மண்ணிலும் விண்ணிலும் சொலற்கரிய புகழ்பெற்றனர். இங்ஙனமன்றி கண வன்சொற்கேளாமல் கைகேசியும், அகத்தியமுனிக்குக் கீழ்ப்படியாமல் நகுடனும் முறையே வசையையும் பாம்பின் ஸ்வரூபத்தையுமடைந்து வருத்தமுற்றனர். ஆதலின் யாவரும் "அரசனுபாத்தியான் தாய்தந்தை தம்முன், நிகரில் குரவ ரிவரைத் தேவரைப்போலத் தொழுதெழுகவென்பதே யாவருங்கண்டநெறி" என்றும் நெறியைக் கைக்கொண்டு யாவருக்குங் கீழ்ப்படிந்து நடந்து கடவுளைச் சிந்தித்து வணங்கி என்று மழியாததாயும் ஆனந்தக்கடலாயுமுள்ள வீடடைந்து பிறத்தலாகிய கடலைக்கடந்து இன்னல் நீங்குவோமாக.

---

## திருப்தி.

"அரிதரிது மானிட ராதலரிது" என நம் மூதாட்டியாகிய ஒளவையா ரும் திருவாய்மலர்ந்தருளி யிருக்கின்றனள். அப்படி யிருக்க எல்லாம் வல்ல பரம தயாநிதியாகிய அனுதாக்ஷகனால் நாம் இப்பூவுலகின்கண் சிருஷ்டிக்கப் பட்டு அவர் கிருபையினால் எல்லா சாதனங்களும் அளிக்கப்பெற் றிருக்கிறோம் என்பது கற்றோரும் மற்றோரும் அறிந்ததோர் விஷயமே.

"தோன்றிற் புகழொடு தோன்றுக வஃ திலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று"—என திருவள்ளுவரும் கூறி யிருக்கின்றனர். மானிடராய்ப் பிறந்து புகழின்றி இவ்வுலகில் மரிப்பது மிக்க இழிவேயாகும். அப்படிப் புகழோடு, சத்கர்மங்களிலும், ஸத்சங்கத்திலும் கூடி வாழ்வதற்குத் திருப்தியே முதன்மையான காரணமாக விருக்கிறது.

நமது அந்தக் கரணமானது கலக்கமற்று அவாவின்றி நிலைதங்கி நிற்ப தற்கே திருப்தி எனப் புகலத்தகும். இது ஒருவிதக் கேட்டையும் உண்டுபண்ண மாட்டாது. எப்பொழுதும் இதில் ஒருவிதசுகம் உண்டு என்பது திண்ணம். எந்த மகானிடத்தில் நெற்றித் திலகம்போல் விளங்கும் திருப்தி என்பது இருக் குமோ, அம்மகானிடத்தில் சகல நற்குண நற்செய்கைகளும் அதிகரித்து வரு மென்பதற்கு ஐயமேயில்லை. ஸத்புருஷனின் நற்குணங்களுள் முன்னுறவிளங்

குவது திருப்தியே ஆகும். மானிடராய்ப் பிறந்து திருப்தி என்பது இன்றேல், மற்றைய குணங்களால் யாது பயன் அடையமுடியும். ஏனெனில், இவ்வுலகத்தில் எதுவும் அழிவுள்ளது.

" ககனகரகல்ப : ஸங்கமோ வல்லபாஞம்,
ஜலடபடல துல்யம் யௌவனம் வா தனம்வா,
ஸ்வஜன சுதசரீராதினி வித்யுச்சலானி,
க்ஷணிகமிதி சமஸ்தம் வித்திசம் சாரவிருத்தம்." இதுவும் இவ்விடத்தில் கவனிக்கத் தக்கதே.

திருப்தியை அடைந்தவன் பின்னர் ஈசுவரனின் கிருபையால் எதுவும் அடைய வல்லமை உடையவனுவன் என்பது திண்ணம். இதைவிட மேலான சுகம் கிடையாது. இதைவிட வேறு செல்வமுமில்லை, சிறப்புமில்லை. அதிருப்தி அடைபவர் " அதிக ஆசை அதிக நஷ்ட " மென்பதை அறியவில்லை போலும். இதென்ன பேதமையா யல்லவோ காண்கிறது. அந்தோ! அப்படியேதான் அதிக ஆசைப்பட்டு ஸர்வ ஐஸ்வர்யமும் நிறைந்தவனுகி விட்டால், எல்லாம் அனித்தியமாகையால் இவன் என்ன இகத்திற்கும் பரத்திற்கும் சாதனமாகப் பயன் அடையமுடியும்? ஐஸ்வர்யம் அதிகரித்தவுடன் அகங்காரமும் துன்மார்க்கமான செய்கைகளும் அதிகரிக்கின்றன. அவன் கஷ்டதசையை அடைந்தபின்புதான் அதிருப்தியின் கெடுதி உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்கும்.

சிலர் திரவியம் ஏராளமாய்ச் சம்பாதிக்க வேண்டுமெனக் கூறி அயல்தேசம் சென்று தங்களுக்கு இச்சையான வியாபாரமோ, மற்றும் எத்தகைய காரியமோ அவைகளைச் சாதித்துத் தங்கள் பந்து ஜனங்களையும், சுய தேசத்தையும் சுய வர்ணுசாரத்தையும் வெகுதூரத்திற் கப்பால் விட்ட கன்று கடைசியில் அச்சீமையிலேயே. கடுநோயால் பீடிக்கப்பட்டு " அக்கரைக்கு இக்கரை பச்சையாயிருக்கிறது. என் நாட்டில் அநேகவிதமான வியாபாரத்தில் ஏராளமாய் லாபமும் சம்பாதித்தேன். இங்கு வரவுக்கு மேல் சிலவாக விருக்கிறது. இப்பொழுது என் ஊர்போய்ச் சேரக் கையில் காசுமில்லை. என்னை லக்ஷியம் செய்வோர் ஒருவருமில்லை. இப்போது புத்திவந்தது. பேராசையினு லல்லவோ என் உயர் குலத்தையும், பிள்ளைகளையும் உறவினர்களையும் விட்டுவிட்டேன். இப்பொழுதே, ஜகதீசன் கிருபையால் ஊர்போய்ச்சேர்ந்தால் போதுமானது " என்று சொல்லி மறுபடியும் அந்த தேசத்தை விட்டுவிட்டு திருப்தியடைந்து, பேராசை அடங்க சுயதேசம்வந்து சுகித்திருக்கும் கனதனவான்களைப் பார்க்கவு மில்லையா? கேட்டதுமில்லையா? பேராசையினுல் தனது மதாசாரத்தையும், நல்ல ஒழுக்கத்தையும் கெடுத்துக்கொண்டு " ஏராளமான திரவியம் சம்பாதிக்கலாம் " என்ற எண்ணத்தினுல் தூண்டப்பட்டு தன் உத்தமகுலத்தை எக்கேடு வந்திடினும் கெடுத்து விடுவானு! சுய வர்ணுசாரத்தையுமா விட்டுவிட வேண்டும்?

நமது இடத்தில் தரித்திரம் என்ற அக்னியானது எரிந்துகொண்டிருக்கும் பொழுது, திருப்தியாகிற தண்ணீரினுல் அணைக்கவேண்டு மல்லவா? அப்

படியாகில் ஒருநாளும் குறைவு வராது. தரித்திரத்தின் வடிவம் என்ன என்று யோசிக்குமளவில்—பணமில்லாதது தரித்திரமல்ல ; இருக்கிறதைக் கொண்டு திருப்தியடையாமல் ஏங்கிப் பிறரை யாசிப்பதே அதனுடைய சுவரூபமாகும். அப்படியே கூறப்படுகிறது.

தாரித்ரஸ்ய பராமூர்த்தி : யாச்ஞ நத்ரவணப்ரதி :
தாரித்யா அனல ஸந்தாப : சாந்தஸ் சந்தோஷ வாரிஞ ||

[குறிப்பு—திருப்தி-யில்லாத' குணமாகிய 'ஆசை' யென்பதே ஜனன மரணமாகிய இப் பெருந் துன்பத்திற்கு வித்தாயிருக்கிறது. ஆசை யென்னும் பெருங்காற்றிலகப்பட்ட மனம் இலவம் பஞ்சுபோல் சதாஅலைந்து அவதிப்படும். ஆசையே நமக்கு நேரிடும் துன்பங்கட்கெல்லாம் காரணம். அது உள்ளமட்டும் ஆண்டவன் அருள் கிட்டாதென்பது திண்ணம்—அதாவது 'நிராசை' வரு மட்டும் அருள் கிட்டாது. ஆசை யென்பது ஒழிந்தால் பாபமாகிய தீயவினையை யுண்டாக்கும் செயல்கள் யாவும் ஆதாரமின்றி யொழியும். இச்சந்தர்ப்பத்தில் நமது மெய்ஞ்ஞானச் செல்வராகிய தாயுமான சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய "நிராசையின்றேல் தெய்வமுண்டோ" என்ற அருள்வாக்கியம் நன்கு சிந்தித் துணரத் தக்கது. ப-ர்.]

## "எத்தொழில் சிறந்தது?"

இவ்விஷயத்தை நாம் ஒவ்வொருவரும் அறிந்துகொள்ளவேண்டியது அவசியமாகும்.

ஏனெனில் நாம் யாவரும் இப்பிருதிவியில் நடமாடும் வரையில் "குறை வற்ற செல்வத்தையும் குற்றமற்ற தொழிலையும்" அடையவேண்டியது அவசியமல்லவா ? அவ்வாறு அடைவது நம் தேக சம்ரக்ஷணையின் பொருட்டே யாகும். என்பதற்கு ஔவை மூதாட்டியருளிய,

"சேவித்தும் சென்றிரந்தும் தெண்ணீர்க் கடல்கடந்தும்
பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும்—போவிப்பம்
பாழின் உடம்பின் வயிற்றின் கொடுமையால்
நாழி அரிசிக்கே நாம்."

என்ற செய்யுளாற் காண்க. இன்னும்,

" * * * *
* * * *

இன்னடிசிலாற் புவியில் இன்னுயிர்தா னிற்குமென
நந் நெறியோர் சொல்வார் நயந்து"

என்றதற் கொப்ப எவ்வளவு பராக்கிரமசாலியானாலும், அறிவாளியானாலும், பசிப்பிணி உண்டாயின்,

"மானங் குலங்கல்வி வண்மை யறிவுடைமை
தானந் தவமுயற்சி தாளாண்மை—தேனின்
கசிவந்த மெல்லியர்மேல் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப்பறந்து போம்"

என்ற ஆன்றோர் வாக்கிற்கு தற்காலம், இன்று விசேஷதினம் காலைப்போஜனம் கிடையாது. பிற்பகலுக்குத் தான் சாப்பாடு என்றால், அதற்குள் நாம் பசிப்பிணியால் பீடிக்கப்பட்டு வெளியிற் சொல்லாவிடினும் வாட்டமடைகிறோம் என்பது அனுபவத்தில் தெரிகிறது. இவ்வுதை விளக்கிக் கூறுவது அவசியமின்றாம்.

அப் பசிப்பிணியை நீக்கப்பொருள் வேண்டும். அப்பொருளைத் தேட ஏதேனும் ஒரு தொழில் வேண்டும். எத்தொழில் குற்றமற்றது என்று பார்க்கில், வியாபாரியாகில் லாபத்தின் பொருட்டுப் பொய் புறட்டுப் புகன்றே தீரவேண்டும். உத்தியோகமோ வென்றால் தற்காலம் கை லஞ்சம் கொடுக்க நம்மால் இயலாது. அப்படி கொடுத்து ஒரு உத்தியோகத்தைப் பெறினும் எந்த சமயத்தில் இவ்வுத்தியோகத்தினின்று நீக்கி விடுவார்களோ என்ற திகில் மனதில் சதா குடிகொண்டிருப்பது மல்லாமல், நன்மையோ தீமையோ உத்தியோகத்தின் பொருட்டுச் செய்தே தீரவேண்டும். தங்களுக்கேற்ற சௌகரியங்களுக்கு ஏற்ற விதமாய் உத்தியோகம் அமைவதும் கஷ்டம். தன் எஜமானன் மீது தன் மனதில் வருத்தமிருப்பினும், உத்தியோகத்தி னிமித்தம் முகமன் சொல்லவே வேண்டும். அவ்வாறிருப்பதால் இதுவும் ஏற்றதொழிலல்ல. ஓதுவிக்குந் தொழில் பாபமற்றது என்றாலும் தரித்திரம் கூடவே தொடரும். இதுபோல்வனவே சித்திரம், கவியிசைப்புப் பாவலருக்கும். வைத்தியம், சோதிடம், மாந்திரீகம் இவை இல்லறத்தாரிடம் உண்மை புகலாது ஒன்றுவிட்டு ஒன்று கூறி பொருள் பறிக்குங் கர்மத்தொழிலாகும். இவ்வாறே ஏனைய தொழில்களினும் சிறிது குறையுள்ளது எனலாகும்.

ஆயின் நம்மூதுலகில் தெய்வத்தன்மை வாய்ந்த ஔவைப் பாட்டியார், ஞானப்பாலுண்ட வள்ளுவனார் திருவாய் மலர்ந்தருளிய செய்யுளின்படி இப் பூமியில் உழைத்துப்பாடுபட்டுச் சாப்பிடுவதே சிறந்த தொழில். மற்றத் தொழில்களுக்குப் பங்கம் நேரினும் இதற்குயாதொரு பங்கமும் நேராதென்று இயம்பிய செய்யுளாவன :

" ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே—ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு "

" பூமி திருத்தி யுண் "
" நெற் பயிர் விளை "
" மேழிச்செல்வங் கோழைபடாது "
" தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது "

குறள்.

" சுழன்றுமேர்ப் பின்ன துலக மதனா
லுழந்துமு ழவே தலை "

"உழுவா ருலகத்தார்க் காணியஃதாற்று
தெழுவாரை யெல்லாம் பொருத்து"

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாந்
தொழுதுண்டு பின் செல்பவர்"

**குமரேசசதகம்.**

"நல்ல தேவாலயம் பூசனை நடப்பது
நாடோறு மழை பொழிவதும்
நாடிய தபோதனர் கண் மாதவம் புரிவது
நவில்வேத வேதிய ரெலாம்
சொல்லரிய யாகாதி கருமங்கள் செய்வதுந்
தொல்புவி செழிக்கு நலமுஞ்
சுப சோபனங்களுங் கொற்றவர்கள் செங்கோல்
துலங்கு மனுநெறி முறைமையும்
வெல்லரிய சுகிர்தமொடு வர்த்தகன் கொள்விலையும்
விற்பனையு மதிக புகழும்
மிக்கவதி காரமுந் தொழிலாளர் சீவனமும்
வீர ரணசூர வலியும்
வல்லமைகள் சகலமும் **வேளாளர் மேழியின்**
வாழ்வி னுன்விளைவ தன்றோ
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலை மேவு குமரேசனே"

என்ற முதுமொழிகளுக் கேற்ப ஒருவரைப் பணியாது மற்றவர்களைக் காப்பாற்றும் இம் மேழிச்செல்வங் குறைவு படாதது. நாம் எவ்வளவு பூமியில் கஷ்டப்பட்டு உழைக்கிறோமோ அதற்குத் தகுந்த ஊதியங் கிடைக்கிறது. இதில் பொய் வஞ்சனை முதலிய துர்ச்செய்கைகள் கிடையாது. பாடுபட்டதற்குக் கூலி கிடைக்கும். சொற்ப நாளைக்கு கஷ்டப்பட்டால், மற்றைய நாட்களில் சௌக்கியமாகச் சாப்பிட்டுக்கொண்டு தங்கள் வாழ்நாளை நல் விதமாகக் கழிக்கவும் இஃது ஒரு ஏதுவான தொழிலாகவு மிருக்கிறது. இத்தொழிலுக்கு இன்றியமையாத பொருளாகிய வருணபகவான் காலாகாலங்களில் குன்றாது வானீர் வருஷிக்கச் செய்யில் இதற்கு இணை எத்தொழிலுமில்லை. அவ்வாறு ஒரு ஆண்டில் குறையினும் ஈராண்டில் இரண்டத்தனை பலனை அடையத் தடையில்லை. ஆனதால் "மேழிச் செல்வங் கோழைபடாது" எனக்கூறினர்.

இவ்வாறிருக்க நம்மோர்க்கு செந்நெல் விளையு நிலமிருப்பின், அதை மற்றொருவரிடம் ஒப்படை செய்து பட்டணங்களிற் சென்று உத்தியோகத்தை வகித்து உல்லாசமா யிருக்கிறார்கள். இங்கு இவர்கள் உல்லாசமாயிருக்க இவர்கள் பொருளோ "தான் பாராத பொருள் பாழ்" என்பது போலாகி விடுகிறது. தொன்று தொட்டு விவசாயமே நம் தொழிலாக இருக்க நம்மிடம் கற்றுக்கொண்ட மேல் நாட்டார் தங்களுடைய தொழிலை நம்மிடம் கொடுத்து நம்

மிடம் கற்றுக்கொண்ட விவசாயத்தொழிலை சட்டதிட்டங்களோடு நடத்தி வருகின்றார்கள். நாம் உத்தியோகத்திற் றாசைப்பட்டு நம்முன்னோர்கள் கைப்பற்றி வந்த இந்த விவசாயத்தொழிலை யிழந்து விட்டோம்.

ஆனதால் நம் நேயர்கள் கண்ணுற்று குற்றமற்ற தொழிலையும் குறையாச் செல்வத்தையும் அடைய முயலுவோ மென்றே எத்தொழில் சிறப்பு என்ற வினாவிற்கு **உழவுத் தொழில்தான் சிறப்பு வாய்ந்தது** என முன்னோர்கள் மொழியைக் கொண்டு புகலலாயினேன்.

---

## சுகம்.

"அறத்தால் வருவதே இன்பம்."

இந்த உலகத்தில் சுகத்தை விரும்பாதவர் யாரும் இல்லை. மனிதர் முதல் ஸகல உயிர்களும் சுகப்ராப்தியையும் துக்க நிவிர்த்தியையுமே விரும்புகின்றனர். ஆயினும் ஆறறிவுகொண்ட மக்களைப்பற்றியே இங்கு முக்கியமாகக் கூறப்படுகின்றது.

ஒவ்வொருவரும் சுகத்தையே விரும்பியபோதிலும் பெரும்பாலார் அதனை அடையும் வழிகளைச்சரியாக அறிந்துகொள்ளமுயல்வதில்லை. வடக்கே காசிக்குச் செல்ல விரும்பும் ஒருவன் தெற்கேயுள்ள கன்னியாகுமரியை நோக்கி விரைந்து செல்வதுபோல, சுகத்தை விரும்பும் நம்மவர்களிலே பலர் அறியாமையால், துக்கத்திற்கும் துன்பத்திற்கும் உரிய மார்க்கங்களிலே விருப்புடன் சென்று கொண்டிருக்கின்றனர்.

ஸத்யமும் தர்மமும் நித்யாநந்த வித்துக்களாகும். அங்ஙனம் இருக்க, அஸத்யத்தையும் அதர்மத்தையுமே இன்பசாதனங்களாகக் கருதி, தீ நெறிகளில் சென்று சிறுமையடைவோர் எத்தனைபேர்? ஒழுக்கம் விழுப்பம் தரும் என்பது உண்மை நூற்றுணிபு. அங்ஙனம் இருக்க இழுக்கத்திலே சென்று எய்தாப்பழி எய்துவோர் எத்தனைபேர்?

ஸத்யத்தைச் சிந்தித்து, ஸத்யத்தைப் பேசி, ஸத்யத்தைச் செய்து, ஸத்ய மார்க்கத்திலே செல்வோரே ஸத்தான சுகவாழ்க்கையை அடைதல்கூடும். தர்மத்தைச் சிந்தித்து, தர்மத்தைப்பேசி, தர்மத்தைச்செய்து, தர்மமார்க்கத்திலே சென்று வாழ்வோரே தர்மரூபியான ஸர்வேஸ்வரனின் தண்ணருளைப் பெற்று ஸதாநந்தர்களாய் வாழ்தல்கூடும். இது என்றும் நித்யமான உண்மையாகும்.

ஸர்வேஸ்வரனை கடவுள் ஸத்யரூபியென்றும் தர்மரூபியென்றும் கூறப்படுகின்றார். எனவே, ஸத்யத்தையும் தர்மத்தையும் உறுதியாகப் பின்பற்றலே சுகப்ராப்திக்குரிய மார்க்கமாம்.

ஸத்யமாகிய தாய், ஞானமாகிய தந்தை, தர்மமாகிய உடன் பிறந்தோன், தயையாகிய சிநேகிதன், சாந்தியாகிய மனைவி, க்ஷமையாகிய மைந்தன், இவ்வறுவரும் எனக்கு இஷ்டமான பந்துக்கள் என்று தர்மராஜன் ஒரு சந்தர்ப்பத்தில் கூறியிருக்கிறார். சுகப்ராப்தியை விரும்பும் அனைவரும் மகாமேதாவி

யான தர்மராஜனது வார்த்தைகளை நன்கு கவனித்தல்வேண்டும். ஸத்யம், தர்மம், ஞானம், கருணை, பொறுமை, சாந்தியென்னும் இவ்வுத்தமகுணங்கள் ஆறையும் உறுதியாகவிடாது கைக்கொண்டு வாழ்வோர் என்றும் மாறாத சுக ப்ராத்திக்கு உரியவராவர் என்பதில் ஐயம் என்ன ?

" அறிவ தறிந்தடங்கி, அஞ்சுவ தஞ்சி,
உறுவ துலகுவப்பச் செய்து—பெறுவதனால்
இன்புற்று வாழும் இயல்புடையார் எஞ்ஞான்றும்
துன்புற்று வாழ்தல் அரிது "

அறியத் தக்கதை அறிந்து அடங்கி, அஞ்சத்தகுந்ததற்கு அஞ்சி, செய்யத்தக்கதை உலகத்தார் மகிழச்செய்து, வரும்பயனால் இன்பமடைந்து வாழ்கின்ற குணமுடையார் எக்காலத்திலும் துன்பமடைந்து வாழ்தலில்லை ' என்று இன்பவாழ்க்கைக் குரிய மார்க்கத்தை நாலடியார் கூறுகின்றது.

வாழ்க்கையாகிய நீண்ட யாத்திரையில் நாம் சுகத்தை அடைவதற்காகவே நமது முன்னோர்கள் பல அரியநூல்களை அருளிச்செய்திருக்கின்றனர். ஆயினும் நம்மவருட் பலர் "ஏட்டுச்சுரைக்காய் கறிக்காகுமா" என்றுகூறி அவற்றைப் பொருட்படுத்தாது வாழ்கின்றனர்.

' நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்."

என்னும் வேதவாக்கியம் என்றும் உண்மையே யாகும்.

" கடக்கரும் வலிசேர் கின்ற கலியெனும் காலத் தாசை
அடக்கரி தாகி, உண்மை, அருள், பொறை, புனிதம், ஆயுள்,
உடற்குறும் திண்மை, புந்தி, உற்றிடு நினைவு பார் மேல்
நடக்குறும் தருமமெல்லாம் நாட்கு நாட் குறையும் அம்மா."

என்று பாகவதத்திலே பரிட்சித்துக்கு சுகர் கலிதர்மம் உரைத்த அத்தியாயத்தில் கூறியுள்ளவாறு இக்காலத்தில் உலகத்தில் தர்மங்களெல்லாம் நாளுக்கு நாள் குறைந்துவருகின்றன. ஸத்யமும் தர்மமும் குன்றிவர, அஸத்யமும் அதர்மமுமே மேலோங்கிவருகின்றன. அதனால்தான் உலகத்திலே சுகம் குறைந்து துக்கமே பெருகிவருகின்றது. எனவே, சத்யத்தையும் தர்மத்தையும் உறுதியாகப் பின்பற்றல் சுகவாழ்க்கைக்குரிய ஒரே சாதனம் என்பதை மீட்டும் வற்புறுத்துகின்றோம்.

" இருளே உலகத் தியற்கை, இருளகற்றும்
கைவிளக்கே கற்ற அறிவுடைமை, கைவிளக்கின்
நெய்யேதன் நெஞ்சத் தருளுடைமை, நெய்பயந்த
பால்போல் ஒழுக்கத் தவரே பரிவில்லா
மேலுலகம் எய்து பவர்."

## சிறுவர்கள் பக்கம்.

சீடர்களில் பல குணபேதமுண்டு. உபாத்தியாயராகிய குரு ஒன்றைப் போதித்தாலும் மாணவனுகிய சீடன் அதைப் பெற்றுக்கொள்வதில் நல்ல புத்தியை உபயோகிக்கவேண்டும். முதலாவது மனதை வேறு விஷயத்தில் செல்லவிடா திருத்தல்வேண்டும். இன்றேல் சொல்லப்படுவது செவியிலேறுது. குருமொழியும் வித்யாவிஷயங்களைச் செவிகளால் ஏற்றுக்கொள்ள வேண்டியிருப்பதால் வடமொழியில் சீடனுக்கு 'சுரோதா' வென்று கூறப்பட்டிருக்கிறது 'சுரோதா' என்ற வார்த்தை 'சுரோத்ரம்' என்ற பதத்திலிருந்து வந்தது. 'சுரோத்ரம்' என்முல் செவியென்று பொருள்.

'சுரோதா' என்முல் செவிகளால் கேட்டுக்கொள்பவன் அதாவது சீடன் என்று பொருள்.

வடநூல்வல்லோர் இந்த சுரோதாக்களைப் பலவகுப்பாய்ப் பிரித்துக் கூறியிருக்கின்றன. அவற்றும் முக்கியமான நான்கை மட்டும் ஈண்டு கூறுவாம்.

(1) ஹம்ச சுரோதா. (2) குக்கிட சுரோதா. (3) சுக சுரோதா. (4) மகிஷ சுரோதா.

1. 'ஹம்சம்' என்முல் அன்னப்பட்சி. அது நீரைப்பிரித்து பாலை மட்டும் உட்கொள்வதுபோல், தான் கேட்டவற்றில் சத்தான விஷயங்களை மட்டும் மனதிற் சேகரித்துக்கொண்டு, அசத்தானவற்றை விட்டுவிடும் குணமுடையவனுக்கு ஹம்ச சுரோதாவென்று பெயர்.

2. குக்கிடம் என்முல் கோழி—கோழி காலால் நிலத்தைக்கிளரி அதில் மறைந்திருந்து அகப்படும் தானியமணிகளைப்பொறுக்கி யுண்கின்றது. அதைப் போல் இடையிடையில் குருவினிடத்தில் வணக்கத்தோடு தக்க கேள்விகளைக் கேட்டு சந்தேகங்களை நிவர்த்திசெய்து கொள்வதோடு முன் கூறியவற்றில் மறைந்திருந்த அந்தரார்த்தங்களாகிய பொருள்களையும் கிரகித்துக்கொள்ளும் குணமுடைய சீடனுக்கு குக்கிட சுரோதாவென்று பெயர்.

3. சுகம் என்முல் கிளி யென்று பொருள்—கிளியானது ஒரு தோட்டத்திற்குச் சென்று மரத்தில் நல்ல பதத்தில்பழுக்க ஆரம்பிக்கும் கனியை அன்று எதுவரை பழுத்திருக்கிறதோ அதுவரை புசித்துவந்து, பிறகு தினம்தினம் சென்று அது பழுக்கப்பழுக்க கொஞ்சங்கொஞ்சமாய்ப் புசித்துவரும். அதைப் போல் ஆத்திரப்படாமல் குரு முதற்கூறியதைமட்டும் கேட்டுக்கொண்டு பிறகு அவருக்கு அனுபவம் முதிரமுதிர தினம்சென்று அவர் அனுபவத்தால் உணர்ந்த விஷயங்களைக் கொஞ்சம் கொஞ்சமாய்க் கிரகித்துக்கொள்ளும் குணமுடைய சீடனுக்கு சுக சுரோதாவென்று பெயர்.

4. மகிஷம் என்பது எருமை. மேலே தெளிந்திருக்கும் ஜலத்தையுடைய ஏரிக்கு எருமைசென்முல் பக்குவமாய்க் கரையில் நின்றபடி தெளிந்த ஜலத்தைப் பருகிவிட்டு வராது. என்னசெய்யுமெனில், அதிற் கால்களை வைத்துக் கிளரிக் கீழேபடிந்துகிடக்கும் வண்டல் சேறு முதலிய அசுத்

தங்களையெல்லாம் கலக்கி ஜலத்தை யடியோடுகெடுத்துத் தானும் அருந்தாது பிறருக்கும் பயன்படாது செய்துவிட்டுத் தேகமுழுதும் சேற்றைப் பூசிக்கொண்டு ஓடும். அதைப்போலவே சிலர் ஒருவர் பிரசங்கம் செய்யும்போது வீணான குதர்க்கத்திற்கு ஆரம்பித்துத் தான்பிடித்த முயலுக்கு மூன்றேகால்களென்று வாதாடிப் பிரசங்கம் செய்வோர்க்குக் கோபத்தையும் மனவருத்தத்தையும் உண்டாக்கிச் சச்சரவு விளைவித்துச் சபைகலையச் செய்துவிட்டு வீட்டிற்குத் திரும்பும் குணமுடையோரா யிருக்கிறார்கள். இந்த மூடசிகாமணிகளுக்கே மகிஷ சுரோதாக்கள் என்று பெயர்.

மாணவர்கள் தங்களால் கூடியவரையில் முதல் மூன்று சுரோதாக்களின் குணங்களைப்பெற முயலவேண்டும்.

## மாணவர்கள் கவனிக்கவேண்டிய ஒரு விஷயம்.

### சம்பாஷணை.

நாம் ஒருவரோடு பேசும்போது கீழ்க்கண்ட விதிவிலக்குகளை யவசியம் கவனிப்பது மிக்க பலனை யளிக்கும்.

1. நம்மோடு பேசுவோர் கல்வியிலோ, செல்வத்திலோ, அந்தஸ்திலோ, குடிப்பிறப்பிலோ, வயதிலோ நம்மிலும் தாழ்ந்தவர்களா யிருந்தாலும் அன்போடும் மரியாதையோடுமே சம்பாஷிக்கவேண்டும்.

2. அவர்கள் ஏதாவதொரு சங்கதியை நம்மிடம் கூறும்போது அதில் ஒரு அம்சத்தை மறைப்பதாய்த்தோன்றினால் "அது என்ன இரகசியம் அதைக் கூறு" என்று கேட்கலாகாது.

3. அவர்கள் பேசும்போது நாம் ஏதேனும் கூறவேண்டி யிருந்தால் பொறுமையோடு அவர்கள் சொல்வதையெல்லாம் கேட்டுக்கொண்டு பிறகே கூறவேண்டும். அதைவிட்டு இடையில் "சற்று நிறுத்து நிறுத்து, நான் கொஞ்சம் ஒருசங்கதி சொல்லுகிறேன்" என்று அவர்கள்பேச்சை நிற்கச் செய்து நாம் பேசலாகாது.

4. நம்மிலும் கற்றோராவது மேலோராவது ஒன்றைக் கூறும்போது, அல்லது யாரேனும் ஒரு விசேடசமாசாரத்தை நமக்குத் தெரியாதென்றெண்ணிக் கூறும்போது, சிலர் உண்மையில் அது தங்களுக்குத் தெரியாதேயெனினும் கௌரவத்திற்காகவாவது "அது தெரியும் தெரியும்" என்று கூறுவதுண்டு. இது மிக்க முட்டாள்தனமான செய்கை. நமக்கு அந்தவிஷயம் தெரிந்ததேயாயினும் இன்னொருவர் அது சம்பந்தமாய் நமக்கு இதுகாறும் தெரியாத ஏதாவதொன்றையும் சேர்த்துக்கூறக்கூடும். அதிலும் நம்மிலும் கல்வி கேள்விகளில் மேம்பட்டவர்களிடம் அவ்வாறு நடந்துகொண்டால், நாம் வீண்பெருமையுடையோம் என்று அவர்கள் தெரிந்துகொண்டு பிறகு நமக்கு அரியவிஷயங்கள் எதையும்கூறப் பிரியப்படமாட்டார்கள். இதனால் நமக்கு அறிவு விசாலப்படாமல் தடைபட்டுப்போம். கல்வியினும் கேள்வி சிறந்ததாதலால் இது விஷயத்தில் மிக்க ஜாக்கிரதையாய் நடந்துகொள்ளவேண்டும்.

5. இன்னொருவரைப்பற்றித் தூஷணையான சங்கதிகளை யொருவர் நம்மிடம்கூறினால், நாம் அதை யுடனே மறந்துவிடவேண்டும். அதை யப்படியே யொன்றுவிடாமல் முடிபோட்டுக்கொண்டு பிறகு அந்த ஆளைச் சந்திக்கும்போது இன்னவன் உன்னைப்பற்றி இவ்வாறு என்னிடம் கூறினான் என்று அவனிடம் சொல்வது மிக்க இழிவான நடக்கை. சிலர் உடனே அந்த ஆளைத் தேடிச் சென்று தாம் கேட்டதோடு இன்னும் சிலவற்றைச் சேர்த்துக்கொண்டு கூறுவது முண்டு. இத்தகையோர் பிறகு யாவராலும் நிந்திக்கப்பட்டுக் கஷ்டமு மடைவார்கள்

6. எவரையும் முகத்திற்கு முன்பு வேணுமென்றே புகழ்ந்து பேசலாகாது. புத்திமான்களுக்கெல்லாம் அது மிக்க வெறுப்பாகவே தோன்றும்.

7. நாம் கூறுவது உண்மையான சங்கதியேயெனினும் ஒருவர் எதிரில் அவர்கள்மனதிற்கு வருத்தமுண்டாக்கத்தக்க விஷயத்தை யொருபோதும் கூறலாகாது. அது மிக்க பாபச்செய்கையாகும்.

8. ஒருவரிடம் பேசும்போது நம்மைப்பற்றிப் புகழ்ச்சியான சங்கதிகளை யொருபோதும் கூறலாகாது.

9. நம்மிலும் மேலோரிடத்திலும் பெரியோரிடத்திலும் சம்பாஷிக்க நேர்ந்தபோது அடக்கத்தோடும் மரியாதையோடும் அவர்கள்கேட்கும் விஷயங்களைப்பற்றிமட்டும் கூறவேண்டுமேயன்றி நம் மனம்போனபடி கதை கூறலாகாது.

10. நமக்கு மனவருத்தத்தை யுண்டாக்கத்தக்க, விஷயத்தை ஒருவர் கூறினும், நம்முன் நமது மதத்தையாவது, நம்மைச் சேர்ந்தவைகளையாவது இழிவாய்க்கூறினும், தூஷிக்கினும் அதைச் செவிகொடுத்துக்கேளாமல் உடனே தூரப்போவதே உத்தமகுணமாகும்.

---

## ஒரு தேசாபிமானச் சிறுவன்.

ஸ்பெயின் நாட்டுக் கப்பலொன்று பார்சிலோனாவிலிருந்து ஜிநோவாவுக்குப் போய்க்கொண்டிருந்தது. அக்கப்பலில் பிரெஞ்சுக்காரர், இத்தாலியர், ஸ்பெயின்நாட்டார் முதலிய பலஜாதியார் இருந்தனர். அந்தப்பிரயாணிகளுள் பதினொருவயதுள்ள சிறுவன் ஒருவனும் இருந்தான். அவன் உடை மிகவும் கேவலமாயிருந்தது. தன்னைப் பிறர் எவ்வாறு கருதுவார்களோ என்ற உள்ளத்தனாய் அவன் பிறரை நோக்கியவண்ணமாயிருந்தான்.

சிறுவனது பெற்றோர் விவசாயிகள். மிகுந்த ஏழைகள். அதனால் பணத்திற்கு ஆசைப்பட்டு தங்கள் புத்திரனை ஒருவேடிக்கைக்கூட்டத்தின் தலைவரிடம் ஒப்புவித்துவிட்டனர். அவர் வேறு தேசங்களுக்குச் கூட்டிச் சென்றனர். அவர் அவனை மிகுந்த கஷ்டப்படுத்தினர். அவனுக்குப் போதுமான ஆகாரம்கூடக் கிடைக்கவில்லை.

பார்சிலோனா என்னும் இடத்திற்கு வந்தவுடன் அவன் எவ்வாறோ வேடிக்

கைக் கூட்டத்தாரைவிட்டுத் தப்பி அங்குள்ள தனது தேசத்து (இத்தலிய) தூதரிடம் தனது வரலாற்றைத் தெரிவித்தான். அவர் அவன்மீது அநுதாபப்பட்டு அங்கிருந்து ஜிநோவாவுக்குச் செல்லும் அந்தக் கப்பலில் ஏற்றி அனுப்பினர்.

பலநாட்களாக நல்ல ஆகாரமில்லாமையால் பையன் நோயாளிபோலக் கந்தை உடையுடுத்து பிரயாணிகள் ஒருவரோடும் பேசாமல் மௌனமாயிருந்தான். அவன் வேடிக்கைக் கூட்டத்தாரிடம் பட்டகஷ்டம் அப்படிப்பட்டது.

கடைசியாக, மூன்று பிரயாணிகள் மிகுந்த முயற்சிசெய்து அவனை வாய் திறக்குமாறு செய்தனர். அதனால் அவன் தனது சரித்திரத்தைச் சுருக்கமாகக் கூறினன். அந்த மூன்று பிரயாணிகளும் இத்தலியரல்ல; ஆயினும் அவனது பரிதாப நிலைமையை உணர்ந்தனர். அவன்மீது இரக்கத்தாலும், காலப் போக்குக்காகப் பேசலாமென்ற கருத்தாலும், அவனைப் பேசுமாறு செய்வதற்காக, அவனுக்குக் கொஞ்சம் பணம் கொடுத்தனர். அப்பொழுது கப்பலின் மற்றப் பகுதிகளிலிருந்து சிலமாதர்கள் அங்குவந்தனர். அந்தச் சமயத்திலும் மேற்கூறிய மூன்று பிரயாணிகளும், அவன்மீது கவனத்தை யிழுப்பதற்காக, இன்னும் கொஞ்சம் பணம் கொடுத்தனர்.

அந்தச் சிறுவன் பணத்தை உடுப்புப் பையில் போட்டுக்கொண்டு அவர்களுக்கு வந்தனம் கூறினன். பின் அவன் தனது அறைக்குள்சென்று கதவை அடைத்துவிட்டுப் பணத்தை என்னசெய்வதென்று யோசித்துக் கொண்டிருந்தான். அவன் சிந்தித்ததாவது:—

"இந்தப் பணத்தைக்கொண்டு, சென்ற இரண்டுவருஷகாலமாக அரைவயிறும் குறைவயிறும் சாப்பிட்ட யான் வயிறுநிறையச் சாப்பிடலாம். இதுவரை யான் உபயோகித்துவந்த (கோட்) மேற்சட்டை கந்தல் கந்தலாய்ப் போய்விட்டது; ஜிநோவாவுக்குப் போய்ச் சேர்ந்தவுடனே நல்லதாக ஒன்று வாங்கிக் கொள்வேன். நான் கையில் கொஞ்சம் பணம் கொண்டுபோனல் எனது பெற்றோர்கள் மிகுந்த சந்தோஷம் அடைவார்கள். மெய்யாகவே இந்தப்பணம் எனக்குக் கடவுள் கிருபையால் கிடைத்திருக்கிறது."

இவ்வாருக, மூடிய அறைக்குள் இருந்துகொண்டு அந்தச் சிறுவன் பலவாருகச் சிந்தித்துக்கொண்டு, 'இப்பொழுது நமது நிலைமை கொஞ்சம் திருப்தியாயிருக்கிறது' என்று தீர்மானித்தான்.

இதற்கிடையில், மேலே கூறிய மூன்று பிரயாணிகளும் சிற்றுண்டி யருந்திக்கொண்டே சம்பாஷிக்கையில் இத்தலியைப்பற்றி (சிறுவன் தாய்நாடு) சம்பாஷித்தார்கள். அவர்களுள் ஒருவர் 'இத்தலியிலுள்ள போஜன விடுதிகள் நன்ருயில்லை' என்று குறை கூறினர்; மற்றொருவர் 'இத்தலிநாட்டில் ரயில்வண்டிகள் மிகுந்த கேவலமாயிருக்கின்றன' என்ருர். மற்றொருவர் 'அங்கே நல்ல சாமான்கள் கிடைப்பதில்லை' என்ருர். இவ்வாருக அவர்கள் இத்தலிக்குச் சம்பந்தப்பட்ட எதற்கும் குறை கூறினரேயன்றி ஒன்றிலும் குணம் கூறவில்லை. 'நான் இத்தலிக்குப் போவதைக்காட்டிலும் லாப்லாந்துக்குப் போவேன்' என்ருர் ஒருவர். 'நான் இத்தலியில் சந்தித்த மனிதர்களெல்லாம்

மோசக்காரப் போக்கிரிகள்' என்றார் மற்றொருவர். 'அங்கேயுள்ளவர்களுக்குப் படிப்பில்லை' என்றார் மூன்றாமவர். 'இத்தலி ஜனங்கள் புத்தியற்றவர்கள்' என்றார் ஒருவர்; 'சுசியற்றவர்கள்' என்றார் இரண்டாமவர்; 'திரு—' என்று மூன்றாமவர் கத்தினார்.

இத்தலிய ஜனங்கள் 'திருடர்கள்' என்று அவர் கூறிப்போனார். ஆனால் அதனைச் சொல்லி முடிப்பதற்குள் அவர்கள்மீது பொன் நாணயங்களும் வெள்ளி நாணயங்களுமாக மழைவருஷிப்பதுபோலச் சரமாரியாக வந்துவிழுந்தன. உடனே மேற்கூறிய பிரயாணிகள் மூவரும் திடுக்கிட்டு 'இந்தப் பணமாரி எங்கிருந்துவருகிறது' என்றுநோக்கினர். அப்பொழுது அவர்கள்மீது செம்பு நாணயங்கள் பல வந்துவிழுந்தன. அவர்களை நோக்கிச் சிறுவன், "உங்கள் பணத்தை நீங்களே எடுத்துக்கொள்ளுங்கள். நான் பிறந்த தேசத்தை இகழ்ந்து பேசுவோரிடம் நான் பிச்சை யேற்கமாட்டேன்" என்று கூறினான். தேசாபிமான மிகுந்த இந்தச் சிறுவனை 'பவோவின் பால்யதேசாபிமானி' என்று இத்தலிநாட்டாரும் மற்றநாட்டாரும் இன்றும் புகழ்ந்துகொண்டாடுகிறார்கள். அவன் பிறந்த இடம் இத்தலிநாட்டிலுள்ள பவோ என்னும் சிற்றூர்.

வாசகர்களே! பார்த்தீர்களா பதினொரு வயதுள்ள பாலியனது தேசாபிமானத்தை! பணம் என்றால் பிணமும் வாய்திறக்கும் என்னும் பழமொழியும் இவனிடம் பொய்மொழியாயிற்றே! இந்தச் சிறுவனுக்குத் தனது தாய்நாடான இத்தலிநாட்டின்மீது இருந்ததுபோன்ற தேசாபிமானம், உங்களுக்கும் உங்கள் தாய்நாடான பாரதநாட்டின்மீது உண்டா? அவ்வாறாயின் நீங்கள் க்ஷேமம் அடைவீர்கள்.

> "பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
> நற்றவ வானிலும் நனி சிறந் தனவே."

---

## ஸ்திரீகள் பக்கம்.

### 1. மனையாளின் மேன்மை.

ஒரு மந்திரி தன் அரசனுக்கு எவ்வாறிருக்கின்றானோ, அவ்வாறே ஸ்திரீயுந் தன் நாயகனுக்கு இருக்கின்றாளென்பது நிச்சயம். சுத்தம், சுறுசுறுப்பு, உண்மை, கீழ்ப்படிதல், பொறுமை, தெய்வபக்தி முதலிய ஆறு லக்ஷணங்களையும், ஆபரணம்போல் அணிந்திருப்பவனே, அமைச்சனும். அவ்வாறே மனையாளென்னப்பட்டவளும் இவ்வாறு லட்சணங்களையும் ஆபரணம்போல் அணிந்திருக்கவேண்டியது அவசியமாம். இதனால்தான் "குடித்தனமோ துரைத்தனமோ" என்னும் மூதுரையும் வழங்கப்பட்டுவருகிறது.

### 2. மனையாள் செய்யவேண்டிய கடமை.

அரசனுடைய வரவு செலவு எவ்வளவென்றும், மித்துரு சத்துரு எவரென்றும், குடிகளைப் பக்ஷத்தோடு நடத்துவது எவ்வாறென்றும், தேசத்தில்

சமாதானத்தை யுண்டாக்கும் வகை யின்னதென்றும் அறிந்து, அரசனுக்கு மேன்மையுண்டாக்கும்படியாக, இராஜகாரியங்களை நடத்துவதே மந்திரியின் கடமையாம். அதுபோல, நாயகனுடைய வரவு செலவு இவ்வளவென்றும், மித்துரு சத்துரு இன்னுரென்று மறிந்து (பிரஜைகளைப்போல் காணப்படும்) பிள்ளைகள், பந்துக்கள், அயலார், சிநேகிதர் முதலியோரை உண்மையிலும் நீதியிலும் நடத்தமுயன்று, நாயகனுக்கு அபகீர்த்திவாராதிருக்கும் வண்ணம், குடும்ப காரியங்களை நடத்திவருவதே மனையாளின் கடமையாம்.

### 3. மனையாள் தன்தலைவனை மதிக்கவேண்டிய விதம்.

(1) ஸ்திரீக்குப் புருஷன் தலைவன்; புருஷனுக்குக் கடவுள் தலைவன் என்று பழமொழி கூறுகின்றது.

(2) கைப்பிள்ளையையுங் கணவனையுங் கரிசனையாய்க் கவனியாதவள் கண் கலங்கி நிற்பாள் என்ற முதியோர் பழமொழியும் வழங்கிவருகிறது.

(3) வாய்கட்டினவளுக்குப் பிள்ளை—வயிற்றைக் கட்டினவளுக்குப் புருஷன் என்னும் பழமொழியும் வழங்கிவருகிறது.

(4) கண்கண்ட கணவனைக் கனப்படுத்த அறியாதவள் கண்காணுக் கடவுளை எவ்வாறு கனப்படுத்தமுடியும் என்று மூதறிவோர் கூறுகின்றனர்.

(5) கொண்டகொழுநனை மேன்மையாகப் பாவித்து அவன் சொல்லைத் தடுக்காமல் அவனுக்குக் கீழ் அமைந்து பக்திவினயத்துடனே பொய்சொன்ன வாய்க்கு போஜனம் கிடையாது என்பதனுற் பொய்பேசாமல் கறந்தபால் கறந்தபடியே அவன்விஷயத்தில்உண்மையாய் ஊசியுஞ் சரடும்போல மனைவி அவன் கருத்தின்வழி ஒழுகல்வேண்டும்.

---

## கற்கோட்டை—நாவல்.

(306-ம் பக்கத் தொடர்ச்சி)

தேவதத்தனுடைய கப்பித்தானும் இன்னொருவனும் முன்னே உள்ளே நுழைந்தார்கள். அம்பலவாணன் அவர்கள் பின் நுழைந்தான். நுழைந்ததும் அங்கிருந்த ஒரு பெரிய அலமாரியின் கதவைத் திறந்து அதில் அறைகள் வகுக்கப்பட்டு அவற்றின் நிறையவைத்திருந்த பொன், வெள்ளிச் சாமான்களைக் காட்டினுன். கப்பித்தானும் அவன் அருகிலிருந்தவனும் ஆவலோடு பளபளவென்று பிரகாசிக்கும் அச்சாமான்களின்மேல் கைவைக்கப் போனுர்கள்.

அம்பலவாணன் "எதற்கும் கதவை மூடிவிடுவது நலம்" என்றான். அச்சமயந்தான் கப்பித்தான் மகனுகிய பலராமனும் மற்றொருவனும் அறைக்குள் நுழைந்தார்கள். பலராமன் கதவை நான் மூடுகிறேன் என்று திரும்பினுன்.

அவன்கூறி வாய்மூடுமுன் அம்பலவாணன் விநாடிக்குள் உறையிலிருந்த தன்கத்தியை உருவிக்கொண்டு வாசற்படியை நோக்கிப் பாய்ந்தான். பலராமன் படுமோசம்! என்று தன் கைத்துப்பாக்கியைத் திருப்பிக்கொண்டு அதன் கைப்

பிடியால் அம்பலவாணன் மண்டைமேல் அடிக்கக் கையை யோங்கினான். மறு விநாடி அவன் அம்பலவாணன் கத்திவெட்டு பட்டுக் குப்புறக் கீழேவீழ்ந்தான்.

கப்பித்தான் சுடவேண்டாம் என்றதும் அவனும் மற்ற இருவரும் ஏககாலத்தில் தங்கள் கத்திகளை யோங்கினார்கள். அம்பலவாணன் வெட்டால் பலராமன் பக்கத்தி லிருந்தவனும் தன் தோழன் பக்கத்தில் விழுந்தான். அச்சமயம் கப்பித்தான் கூடவிருந்தவன் ஈட்டியை யோங்கிக்கொண்டு அம்பலவாணனை முடித்துவிடப் பாய்ந்தான். அம்பலவாணன் தன்மேல் காயம் பட்டதை யுணர்ந்தும் தைரியத்தோடு மாலுமியை யோங்கிப் பின்னுக்குத்தள்ள மாலுமி கப்பித்தான்மேல் தாக்கி இருவரும் பொத்தென்று கீழே விழுந்தார்கள். அம்பலவாணன் ஒருபாய்ச்சலாய் வாசற்படியைத்தாண்டி வெளியில்வந்ததும் தடாலென்று கதவை மூடிவிட்டான். ஆனால் காயத்திலிருந்து உண்டான இரத்தப் போக்கால் ஆயாசமடைந்து அங்கேயே ஓய்ந்துவிழுந்து விட்டான். அதேசமயம் காலடிச் சத்தம் அவன் செவிகளில் விழுந்ததும் கையில் பிடித்த விளக்கோடு செல்வராயரும் தங்கம்மாளும் முன்னே யவனருகில் வந்தார்கள். பின்னாலேயே கமலாம்பாளும் வந்தாள்.

ஆ! அவள் பார்த்தவுடனே அவன் யாரென்று தெரிந்துகொண்டு சந்தோஷத்தால், ஆகா! என்று சத்தமிட்டாள்.

---

## 7-வது அத்தியாயம்

கமலாம்பாள் இட்டசத்தம் பிரதி பலித்துக்கொண்டிருக்கையிலேயே கள்ளர் அறைக்குள்ளிருந்து தடதடவென்று கதவைத்தட்டும் சத்தம் கிளம்பியது. அம்பலவாணன் செல்வராயரை நோக்கி, "கள்ளர்கள், அதற்குள்—அந்த இரகசிய அறையில்-இருக்கிறார்கள். வெளியில்வந்து விடப்பார்க்கிறார்கள். தங்கள் ஆட்களை யழையுங்கள்" என்றான்.

இரகசிய அறை யென்ற வார்த்தைகளைக் கேட்டதே கமலாம்பாளுடைய சந்தேகங்களனைத்தும் ஒழிந்து விட்டன. "கள்ள அறை யில்லையென்று இவர்கள் நமக்குப் பொய் கூறினார்கள். அதைப்போலவே கூறிய மற்றவையும் பொய். இவன் கண்ணபிரானே" என்று தீர்மானித்துக்கொண்டு தன் தந்தையையும் அத்தையையும் விலக்கிக்கொண்டு அம்பலவாணனருகில் வந்து உட்கார்ந்து அவன் சிரசை யிருகரங்களாலும் தூக்கிக்கொண்டு "நீ-நீ யார்" என்பதற்குள் அவளுடைய தந்தை,

"அம்பலவாணன்" என்று கூறிவிட்டு, அவனைநோக்கி, "இதென்ன சங்கதி?" என்று துரிதமாய்க் கேட்டார்.

அச்சமயம் ஏதோ சந்தடிகேட்டு தங்கள் எஜமானன் முதலியவர்கள் சென்ற கலவரத்தால் வேலைக்காரர்களும் அரியநாயகியும் அங்குவந்தார்கள். அரியநாயகியும் அங்கிருந்தவர்களை யெல்லாம் பார்த்ததும் வர்த்தகரையும் தங்கம்மாளையும் கண்ஜாடையால் குறிப்பாய்ப் பார்த்தாள். அதற்குள் தங்கம்மாள் வாலிபனுடைய காயத்தைச் சோதித்துப்பார்த்தாள். செல்வராயர் "உன் புண்ணியத்திற்கு கமலாளையப்புறம் அழைத்துச் செல்" என்று மெதுவாய் அரியநாயகியிடம் கூறினார். பிறகு தன் ஆட்களைநோக்கி "ஹோ! சிலர் இவ்வாலிபனை யொரு நல்ல அறைக்கு எடுத்துக்கொண்டு செல்லுங்கள். மற்றபேர் உங்கள் ஆயுதங்களைத்தாங்கி அந்தச் சுவரின் முன் எதற்கும் எச்சரிக்கையாய் நில்லுங்கள்" என்றார்.

அரியநாயகி கமலாம்பாளைநோக்கி "நீ யிங்கிருக்கலாகாது நாம் அறைக்குச் செல்வோம் வா. இக்காட்சி யுனக்குத் தக்கதல்ல. அதோடு உன்தந்தை கடைசியில்கூறிய மொழிகளைநோக்க இன்னும் ஏதோ ஆபத்து இருப்பதுபோல் காண்கிறது" என்றாள். கமலாம்பாள் "என் தந்தைக்கு எந்தவிடத்தில் ஆபத்து இருக்கிறதோ அங்குதான் நானுமிருப்பேன்" என்றாள்.

கமலாம்பாள் இன்னும் அம்பலவாணனுடைய சிரத்தைத் தாங்கினபடியே யிருக்கிறாள். அம்பலவாணன் அன்போடு அவள்முகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான். ஸர்தார் செல்வராயர் "காயத்தைச் சரியாய்ப் பார்க்கவேண்டும். வேலைக்காரர் அவரையெடுத்துச் செல்லவிடுங்கள்" என்று கூவினர். அதன்மேல் கமலாம்பாள் அவன்சிரத்தை விட்டுவிட வேலைக்காரர் அவனைப் பக்குவமாய்த் தூக்கிச்சென்றார்கள். அரியநாயகி கமலாம்பாளை யழைத்துக்கொண்டு அறைக்குச் சென்றாள். தங்கம்மாளும் தன் சகோதரனிடம் அவசரமாய் இரண்டொருவார்த்தைகளைக் கூறிவிட்டு மாதர்பின்னே சென்றாள்.

செல்வராயர் கையில் உருவியவாட்களோடு நிற்கும் தம் ஆட்களைநோக்கி, "நான் உங்களுக்கு இப்போது ஒரு ஆச்சரியமான இரகசிய சமாசாரம் கூறப்போகிறேன். இங்கொரு இரகசிய அறையிருக்கிறது. ஹா! அதோ அந்தக் கள்ளர்கள் அதன் கதவின்மேல் மோதிக்கொள்ளுகிறார்கள். ஆனால் அது நான்கு அங்குல பருமன் இருக்கிறது. அதன் தாழ்ப்பாள் உறுதியானது. அவர்களால் அங்கிருக்கும் இரகசிய வில் ஆணியைக் கண்டறியக்கூடவில்லை. ஆயினும் நீங்கள் மிக்க ஜாக்கிரதையோடு இங்கு பத்திரமாய் நில்லுங்கள். நான்போய் இக்கள்ளர் எப்படி யிங்குவந்தார்கள்? யார் இவர்கள்? யாவும் அவ்வாலிபனைக் கேட்டறிந்து வருகிறேன். அப்போதுதான் இவர்களை யெவ்வாறு நடத்துவதென்று தெரியும்" என்றார்.

வேலைக்காரர்களின் தலைவன் "தாங்கள் ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம். அவர்கள் எத்தனைபேராயிருந்தாலும் சரி ஒருவனையும் தப்பித்துக்கொண்டு வெளியில்செல்ல விடமாட்டோம்" என்றார்கள். செல்வராயர் உடனே சென்று பத்துநிமிடங்களில் திரும்பிவந்து தன் ஆட்களைநோக்கி,

"அந்தக் கள்ளப்பயல்கள் நால்வர்களே யிருக்கிறார்கள். அதில் இருவர் ஏறக்குறைய அதிக காயமடைந்திருக்கிறார்களென்று தெரிகிறது. நீங்கள் எட்டுப்பேர் இருக்கிறீர்கள். நான் கேள்விப்பட்ட சிலவிஷயங்களால் முதலில் நான் அத்துஷ்டர்களோடு தனியே பேசவேண்டியிருக்கிறது. ஆகையால் நான் இந்த அறையின் கதவை திறந்துகொண்டு உள்ளேசெல்கிறேன். நீங்கள் இங்கேயே யிருங்கள். கதவைக்கொஞ்சம் திறந்தேவைக்கிறேன். நான் கூப்பிட்டால் தட்சணம் உள்ளே நுழையுங்கள்" என்றார்.

ஆட்கள் உடனே சற்று எட்டி நின்றார்கள். செல்வராயர் ஒருவனுடைய கத்தியைக் கையில் வாங்கிக்கொண்டு இரகசிய ஆணியை யழுத்தினர். தட்சணம் கதவுதிறந்துகொண்டது. அவர் அறைக்குள் சென்று பார்த்தபோது பலராமன் அங்குள்ள மஞ்சத்தின்மேல் படுத்திருக்கிறான். அவன் மேல்உடைகளையப்பட்டு தோள்மேல் சீலைசுற்றிக் கட்டப்பட்டிருக்கிறது. இன்னொருவனுடைய வலதுகையும் காயம்பட்டு கட்டப்பட்டிருக்கிறது. கப்பித்தானாகிய தேவதத்தன் முகத்திலும் மற்றொருவன் முகத்திலும் கடுமையான காயங்கள் பட்டிருந்தன. உள்ளே காலைவைத்ததும் செல்வராயர் கள்ளரை நோக்கி, "பயல்களே! நகராதீர்கள். நகர்ந்தால் அதேவினாடி மரணமே நேரிடும். பேசாமல் சொல்கிறபடி கேளுங்கள். நான் அப்போது இரக்கம் காட்டக்கூடும். வெளியில் என் ஆட்கள்

ஆயத்தமா யிருக்கிறார்கள். ஆகையால் இன்னும் துர்மார்க்கத்திற்கு ஆரம்பித்தீர்களோ உங்களுக்கு ஆபத்தாகவே முடியும் " என்றார்.

பிறகு அறையை நன்றாய்ப் பார்த்து ஒருவனேனும் காயம் படாமல் தப்பவில்லை யென்று கண்டபோது அம்பலவாணனுடைய வல்லமையைப்பற்றி மனதில் மகிழ்ச்சியும் வியப்பு மடைந்து கப்பித்தானை நோக்கி,

" அதோ படுத்திருப்பவன் உன் மகன் பலராமனல்லவா ? மிக்க காயம்பட்டதோ ?" என்றார்.

**கப்பித்தான்.**—"இரத்தப்போக்கு நிறுத்தப்பட்டிருக்கிறது. அவன் சில நாழிகைகள் இளைப்பாறி யிருந்தால் சமாளித்துக்கொள்வான் " என்றான்.

**செல்வராயர்.**—" அவன், சில நாழிகைகள் மட்டுமல்ல, சில நாட்கள் மட்டும் இங்கு இளைப்பாறட்டும் " என்றார்.

இதைக்கேட்ட கப்பித்தான் கோபமடைந்து " ஆகா ! இரக்கம் காட்டப் போவதாய்க் கூறிவிட்டு இப்படியா நடத்தப் போகிறீர். பத்திரம், சிந்தித்துச் செய்யும். சதியாலோசனை செய்தவனுக்கு அடைக்கலம் கொடுத்திருக்கிறீர் இப்போது அவன் உமது மனைக்குள் இருக்கிறான்" என்றான்.

**செல்வ.**—" வாயைமூடு. பேசவேண்டியது நான். நீயல்ல. நான் இரக்கம் காட்டுவதாய்க் கூறிய வாக்குத்தத்தத்தை மறக்கமாட்டேன். நீயுன் இரண்டு கூட்டாளிகளையும் அழைத்துக் கொண்டுபோ. உன் புத்திரன் பிணையாளியாய் இங்கிருக்கட்டும். நீ இச்சங்கதியை வெளியிடாமலிரு. என்றைக்கு அவ்வாலிபன் என்மாளிகையிலிருந்து வெளிதாண்டுகிறானோ அன்றைக்கே உன் புத்திரனையும் அனுப்பிவிடுகிறேன். மற்றபடி அவன் விஷயத்தில் நீ யொன்றுக்கும் பயப்பட வேண்டியதில்லை. ஆனால் நீ சதிசெய்தாயோ பிறகு என்ன சம்பவிக்கு மென்பதை நீயே யறிந்து கொள்ளலாம்" என்றார்.

**கப்பித்தான்.**—" நான் தங்களை நெடுநாட்களா யறிந்தவன்."

**செல்வ.**—ஆம். இதைவிட யோக்கியனா யிருந்தபோது—அப்புறம்கூறு.

**கப்பித்தான்.**—நான் நெடுநாட்களாய் தங்களைக் கண்டிருக்கிறேன். ஒருபோதும் தாங்கள் சொன்னசொல் தவறியதில்லை. ஆகையால் அவ்வாலிபன் இங்கிருந்து சென்றதே என்மகனை விடுதலை செய்வதாய்த் தாங்கள் உறுதிகூறிவிட்டால்போதும்.

**செல்வ.**—"சரி, அப்படியே உறுதியாய்க் கூறுகிறேன். உனக்கு இன்னொன்று கூறுகிறேன். நீயோக்கியமான கப்பல் வர்த்தகனாய் இருந்ததைவிட்டு கொள்ளைக்காரனாய்த் திரும்பி விட்டிருக்கிறாய். இந்த நடக்கையை விடு மட்டும் இரத்னபுரியின் துறைமுகத்திற்கு வாராமலிருப்பதே உனக்கு நல்லதாகும். இவ்வளவே, இனி நீங்கள் செல்லலாம்" என்றார்.

கப்பித்தானும் அவன் கூட்டாளிகளும் உடனே வெளியில் அனுப்பப்பட்டார்கள். பலராமன் மட்டும் ஒரு அறையில் தக்க காவலில் வைக்கப்பட்டான். செல்வராயர் தன் ஆட்களுக்கெல்லாம் நல்ல பரிசளித்து நடந்த சம்பவங்களை எள்ளளவேனும் வெளியில் பிரஸ்தாபிக்கலாகாதென்று கட்டளையிட்டார்.

இதற்கிடையில் மாதர் மூவரும் ஒரு அறையில்போய்ச் சேர்ந்தார்கள். கமலாம்பாள் இப்போது மிக்க வனப்புடைய கன்னிகையா யிருக்கிறாள். அரியநாயகிக்கு முப்பது வயதாகிறது. தங்கம்மாளுக்கு அறுபதுக்கு மேலாய்விட்டது. ஆயினும் அவள் நல்ல தேகசுகமும் சுறுசுறுப்பு முடையவளாகவே யிருக்கிறாள். சற்றுநேரம் மூவரும் ஒன்றும் பேசாமலிருந்தார்கள். கமலாம்பாள்

தலை குனிந்தபடி ஏதோ ஆழ்ந்த சிந்தனையி லிருந்தாள். கடைசியில் அவள் சட்டென்று தலை நிமிர்ந்து " அத்தையே! அந்த ஆளுக்கு அபாயகாயம் பட்டிருக்கிறதோ " என்றாள்.

**தங்கம்மாள்.**—இல்லை யில்லை. அவனுக்கு சகல உபகாரமும் சரிவர நடக்கும்.

**கமலாம்பாள்.**—சரிதான் மூன்று வருடங்களுக்கு முன் ஒரு சம்பவம் நேர்ந்த போது ஏன் என்னை யப்படி ஏமாற்றினீர்கள்? அது கனவென்றும் அங்கு இரகசிய அறை யில்லையென்றும் ஏன் பொய் கூறினீர்கள்" என்றாள்.

**தங்கம்மாள்:**—" என் அன்பான குழந்தாய்! உன்மனம் அப்போதிருந்த நிலைமையில் உனக்கு உண்மைகூறினால் கெடுதியாய் முடியுமென்றஞ்சியே அப்படிக் கூறினோம். "

கமலாம்மாள் அரியநாயகியைநோக்கி " சரி, இருக்கட்டும் அந்த ஆள் யார் கூறு ? " என்று கேட்டாள்.

**அரியநாயகி:**—அவன் அம்பலவாணன்றான். ஆனால் நீ முன்னே பார்த்த ஒருவனைப்போலவே இவன் இருப்பதால்தான் நாங்கள் கலவரமடைந்து அப்படிச்செய்ய நேர்ந்தது.

**கமலாம்பாள்:**—" ஆ! ஆயினும் உங்கள் எச்சரிக்கையில் அளவுகடந்து போய் விட்டீர்கள். ஆ! ஆ! அந்தச்சிறுபை. அதன் தையலை நான் பிரித்து விட்டேன். நான் மூர்ச்சையாயிருந்தபோது நீங்கள் மறுபடி யதைத் தைத்து விட்டீர்கள் " என்றாள்.

அரியநாயகி யொன்றும் பதில்கூறவில்லை. தங்கம்மாளும் பேசாமலே யிருந்துவிட்டாள். கமலாம்பாளுக்கு மனதில் விஷயம் ஒருவாறாய்ப் புலப்பட்டாலும் இவர்களை மறுபடி யொன்றும் கேட்கலாகாதென்று பேசாமலிருந்துவிட்டாள்.

மறுநாட்காலையில் போஜனம் செய்யும்போது கமலாம்பாள் அரிய நாயகியை நோக்கி " நமதுவீடு கொள்ளை போகாதபடி காப்பாற்றிய அந்தஆளின் சுகம் எப்படியிருக்கிறது ?" என்றாள். அவள்தந்தை " அம்பலவாணன் சுகமேயிருக்கிறான். ஆனால் அவன் காயம் இலகுவாகி அவன் பூரணசுகமடைய நாலைந்துநாட்கள் செல்லும். அதுகாறும் இங்குதான் இருக்கவேண்டும். ஆனால் அவன் இங்கிருக்கும் சங்கதிகொஞ்சம்கூட வெளியில் தெரியலாகாது" என்றார். அதன்பிறகு அவர்கள் அதைப்பற்றிச் சம்பாஷிக்கவில்லை.

நான்கு நாட்கள் கழிந்தன. கமலாம்பாள் ஆழ்ந்த சிந்தனையோடு பெரும்பாலும் தன் அறையிலேயே காலத்தைக் கழித்துவந்தாள். நான்காவதுநாள் மாலைப்போது கமலாம்பாள் சற்று உலவிவரலாமென்றெண்ணி தோட்டத்திற்குள் சென்று தற்செயலாய் ஒருவிடத்தில் நின்றாள். அந்தவிடத்தில்தான் ஆதியில் அவளும் கண்ணபிரானும் உட்கார்ந்து சம்பாஷித்தது. அங்கு உட்கார்ந்ததும் அந்த நினைப்புவந்தது. சிந்தனை தன்பிரியப்படிசென்றதால் அவள் தன்னை மறந்து " ஆ கண்ணபிரான்—கண்ணபிரான்——" என்றாள்.

மறுவினாடி " கண்ணபிரானல்ல அம்பலவாணன்" என்றஇனிய குரலின் சத்தம் அவள்செவிகளில் விழவே திடுக்கிட்டெழுந்தாள். அம்பலவாணன் தன் எதிரில் நிற்பதைக்கண்டாள். இருவரும் கள்ளஅறையில் சந்தித்து மூன்றுவருடங்களாயின. இப்போது ஒருவர்கண்ணுக்கு ஒருவர் அழகில் விர்த்தியடைந்திருப்பதாகவே உணர்ந்தார்கள். சற்றுநேரம் இருவரும் மௌனமாகவே யொருவரை யொருவர் பார்த்துக்கொண்டிருந்தார்கள். கடைசியில் கமலாம்பாள்,

"உண்மையைத் தயவுசெய்துகூறு. நீ என்னோடுகூட முன்னொருகாலத்தில் இந்தேவிடத்தில் நின்றதில்லையா ?" என்று இரக்கத்தோடுகேட்டாள். அம்பலவாணன் அவளை யன்போடு உற்றுநோக்கி,

"ஆ ! நீயேன் அப்படிக்கேட்கிறாய் என்பதை நான் அறிந்துகொண்டேன். நீ கண்ணன் என்பவனைப்பற்றி சிந்திக்கிறாய். தவறாக என்னை அவனென்று எண்ணினாய்" என்றான். கமலாம்பாள் "சரி. சரி. தயவுசெய்து இதைவிட்டுப் போய்விடும்" என்றாள்.

அம்பலவாணன் எவ்வளவு அன்பாய்ப்பேசியும் தான் கண்ணன் அல்லவென்றவரையில் அவன் எதிரில் நிற்கவும் அவள் பிரியப்படவில்லை. கடைசியில் அவன் "நான் உன் உறுதியான அன்பிற்காக மெச்சிக்கொள்கிறேன். உன் அன்பு முழுமையும் அந்தக்கண்ணன் என்பவனுக்கே இருக்கட்டும். ஆயினும் நான் இப்போது திரும்பவும் உயிருக்குத்துணிந்து இந்நாட்டிற்குவந்த காரணம் என்னதெரியுமோ; உண்மையில் நான் ஒருசதியாலோசனையிலும் சேர்ந்தவனல்ல. ஆகையால் செல்வாக்குடைய என் சுற்றத்தார் ஒருவரைக் கண்டு அவர் மூலமாய் என் நிரபராதத்தன்மையை இராணிக்குத் தெரிவிக்க வேண்டுமென்ற ஒருநோக்கம் இருந்தபோதிலும், உன்னை மறுபடி ஒருதரமாவது காணவேண்டுமென்ற அவாவே அதிகமாய் என்னை யிங்குவரும்படி தூண்டியது. ஆகையால் நீ என்மேல் அன்புவைக்கவேண்டுமென்பது என்கோரிக்கை" என்றான்.

அதற்குள் கமலாம்பாள் "இல்லையில்லை. நீ அம்பலவாணன் என்றும் கண்ணபிரான் அல்லவென்றும் கூறுகிறவரையில் என்னிடம் ஒன்றும் பேச வேண்டாம். நீமட்டும் கண்ணபிரான்றான்என்று கூறினால், ஆ ! அப்போது என் உள்ளத்திலிருந்து அன்பின் ஊற்றுக்கிளம்பும்" என்றாள். இம்மொழிகளைக் கேட்டபோது அவனுடைய கண்களில் ஒருவிதபிரகாசம் உண்டாயிற்று. தன்நெற்றியில் கையைவைத்துச் சற்றுநேரம் சிந்தித்தான். பிறகு கமலாம்பாளை நோக்கி,

"அப்படியானால் நான் இப்போது அனாதையாய், பெரிய அபாண்டமான குற்றம் தலைமேற் சுமத்தப்பட்டு, கள்ளனைப்போல் ஒளிந்துகொண்டிருக்கிறேன் என்பதற்காக நீ யென்னை யலட்சியம்செய்யவில்லை யென்று நம்புகிறேன். ஏனெனில் நீ அன்புவைத்திருக்கும் அந்தக்கண்ணப்பனே யிப்போது உன்முன் நின்று நான் கூறியவையெல்லாம் கூறினால் உனக்கு அவன்மேலுள்ள அன்பு குறையும் அல்லது மாறும் என்று நான் கருதவில்லை" என்றான்.

கமலாம்பாள் "ஆம். உண்மையே. ஒருபோதும்மாறாது. ஏனெனில் வெளிக்கு அவன் எப்படி புலப்பட்டாலும் உலகோர் அவன்மேல் என்ன அபாண்டம் கூறினும் அவன் மனப்பூர்வமாய் கௌரவத்தாழ்வானகாரியம் எதையும் செய்திருக்கமாட்டான் என்று எனக்கு உறுதியாய்த்தெரியும். ஆ ! நான் கண்ணபிரான்விஷயத்தில் இவ்வளவு வாஞ்சையாய்ப் பேசுவது பெண்பிள்ளையாகிய எனக்குத் தகாதென்று நீர் கருதலாகும்" என்றாள்.

**அம்பலவாணன்:**—"இல்லையில்லை ! ஒருக்காலுமில்லை. நீ கூறிய வார்த்தைகளால் உன் மனம் ஒரே உறுதியான அன்பைக்கொண்டிருக்கிறதென்றும், கற்பின் இலட்சணம் முழுதும் உன்னிடம் பொருந்தியிருக்கிறதென்றும், நான் நன்றாயறிந்துகொண்டேன். நீ அந்தக் கண்ணபிரான்மேல் சிறுவயதிலிருந்து மாறாத ஒரே உறுதியான அன்புவைத்திருக்கிற அக்காதலை மாற்றவும் அந்த அன்பை என்னிடம் காட்டும்படி கேட்கவும் நான் முயல்

வேனேல் அது பெரும்பாதகமாய் முடியும். ஆகையால் உன்னுடைய முழு அன்பும் அந்தக் கண்ணபிரானுக்கே யிருக்கட்டும் என்றான்.

இம்மொழிகளைக்கேட்ட கமலாம்பாள் அவன்விஷயத்தில் பின்னும் சந்தேகம்கொண்டாள். அவள்முகத்தில் சந்தோஷம் பிரகாசித்தது. அச்சமயம் சற்று தூரத்திலிருந்த ஒருகதவு திறக்கப்படும் சத்தம்கேட்டதும் செல்வராயர் தோட்டக்காரனிடம் சம்பாஷிக்கும்தொனி அவள் செவிகளிற்கேட்டது. அவள் உடனே அம்பலவாணனைநோக்கி,

" தயவுசெய்து சீக்கிரம் இதை விட்டுப்போய்விடும். என் தந்தை......" என்றாள்.

அம்பலவாணன் :—" நாளை யிதேவேளை யிதேயிடத்தில் நான் வந்திருக்கிறேன். தயவுசெய்து என்னைச் சந்தி " என்றான்.

கமலாம்பாள் அதற்கு அப்படியேயாகட்டும் என்று பதிலளிக்கவில்லை. ஆனால் மாட்டேன் என்றும் கூறவில்லை. மறுநிமிடம் இருவரும் பிரிந்து போய்விட்டார்கள்.

மறுநாள் அவர்கள் சந்திக்கவேயில்லை. ஏனெனில் அன்று நடு இரவே அம்பலவாணன் அவ்வீட்டைவிட்டுப் போய்விட்டான். மறுநாட் காலை போசனவேளையில் கமலாம்பாள் அச்சங்கதியைக் கேள்விப்பட்டாள். சற்று நேரம் அவள்முகம் வெளுத்துவிட்டது. செல்வராயர் கப்பித்தானுக்கு வாக்களித்தப்படி அன்றே பலராமனையும் அனுப்பிவிட்டார். அன்றுவரையில் அவன் அந்த இரகசிய அறையிலே இருந்துவந்தான். வேலைக்காரர்கள் அன்றிரவு மூன்று பேர் வெளியில் அனுப்பப்பட்டதைமட்டும் கண்டார்களேயன்றி ஒருவன் பின்தங்கியதை யவர்கள் அறியார்கள். செல்வராயரே அவனுக்கு வேளைவேளைக்குப் போசனம்கொண்டுபோய் கொடுப்பது. தங்கம்மாள் மற்ற சௌகரியங்களைக் கவனிப்பது. ஆகையால் பலராமன் அங்கிருந்தது மற்ற ஒருவர்க்கும் தெரியாது.

## 8–வது அத்தியாயம்.

மேற்கண்ட சம்பவங்கள் நடந்து இரண்டு மூன்றுமாதங்கள் கழிந்தன. அவ்வருடம் நவம்பர்மீ ஸர்தார் செல்வராயர் அந்நகரத்தின் ஷெரீப்பதவியையடைந்தார். அதைக்கொண்டாட பல ஆடம்பரமான விருந்துகளும் வேடிக்கைகளும் நடந்தன. அச்சமயம் அவரைக் கௌரவப்படுத்த பலதேசங்களிலிருந்தும் செல்வவந்தர்கள் பலர் வந்திருந்தார்கள். கொண்டாட்டங்கள் யாவும் நடந்தபின் அவரவர்கள் தங்கள் தங்கள் நாடுகளுக்குச் சென்றார்கள். ஆனால் பக்கத்து நாடாகிய பாஞ்சாலநாட்டிலிருந்து வந்தவர்களில் ஒருவன் இந்திரபுரியில் பின் தங்கியிருந்தான். செல்வராயர் தன் நகரமாளிகையில் சுமார் ஆறுவாரங்கள் மேற்கண்டபடி பலவித கேளிக்கைகளும் கொண்டாட்டங்களும் நடத்திய பிறகு பொறுக்கான ஐந்தாறு நண்பர்களோடு கற்கோட்டைக்குத் திரும்பினார். மேற்கூறப்பட்ட பாஞ்சாலநாட்டானும் அவர்களில் ஒருவனாய்வந்தான். (தொடரும்)

## செய்நன்றி மறவாமை.

நமது தேசத்து பூர்வீகர்கள் ஒருவர் செய்யும் அற்ப நன்றியையும், பெரியதாய் ஏற்றுக்கொண்டு தம் ஆயுள் பரியந்தம் அந்நன்றியை மறவாது வந்ததாய் நம் சரித்திரங்களால் நன்கு விளங்குகின்றது. இதற்குத் திருஷ்டாந்தமாய் ஒருசிறிய

உபமானம் கூறுதும் :—சாதாரணமாய் நாம் கேவலமாய் மதிக்கக்கூடிய காக மானது பிராதக் காலையில் எழுந்திருந்து "உங்கள் கர்மானுஷ்டானங்களை செய்ய இது சமயம், எழுந்திருங்கள், சோம்பி நித்திரையில் காலம் கழிக்கவேண்டாம். உத்தமமான காலத்தை வீணில் கழித்துவிட்டால் அன்று முழுவதும் சோம்பலாகவே முடியும். ஆதலால் அதி உத்தமமானதும், சரீரசுகத்திற்கேதுவும், மனோநிம்மதிக்குற்றதுமான பிராதக் காலையில் எழுந்திருங்கள். சூரியோதயத்திற்குமுன் ஸ்நானபானங்களை முடித்துக்கொண்டு, ஜெபதபங்களைச் செய்யுங்கள். இதனால் உங்கள் ஆயுள் விருத்தியாகும்" என்று நமக்கு அறிவுறுத்துகின்றது. இக்காக இனங்களைச் சற்று கவனியுங்கள். காகமானது அதி காலையில் எழுந்திருந்து உத்தமமான வாயுவை உட்கொண்டுவருகின்ற தன்மையினால் அவைகளுக்கு நீண்ட ஆயுளுள்ளதாய் மதிக்கவேண்டியிருப்பதுமல்லாமல், நம்மைவிட விசேஷ குணங்களும், சில அவைகள்பால் விளங்குகின்றன. அவையாவையெனின், ஒருகாகத்திற்கு ஏதாகிலும் சில ஆகாரங்கள் கிடைக்குமாயின் நம்மில் சிலரைப்போல் தான்மட்டும் புசிக்காது, தன்னினங்களையும் கூப்பிட்டு, இனங்களோடுதானுமுண்டு சந்தோஷமடையும். அன்றியும்ஒருகாகத்திற்கு ஏதாகிலும் அபாயம நேர்ந்தாலும், மற்ற எல்லா காகங்களும் தன்னினத்தைக் காக்க தங்களாலான வரையில் முயற்சி செய்கின்றதை மேற்படி குணம் கிஞ்சிற்றுமில்லாத நாமறிகின்றோமல்லவா? ஒற்றுமை என்பதை நமக்குக் காகங்களான்வை காண்பித்துக்கொண்டுவந்தாலும், அதிநுட்ப புத்தியையுடைய நாம் அறிந்துகொள்ளுகிறோமில்லை. இத்தகைய உபகாரத்தைக் காகங்கள் நமக்குச் செய்து வருவதால் நம்மவர்கள் அதனது செய்நன்றியை மறவாது நாமுண்ணும்போது முதலில் காகங்களுக்கு அன்னமிடுவது வழக்கமாய் நம்தேசத்தில் நடந்து வந்துக்கொண்டிருந்தது; இப்போதும் நடந்துவருகிறது. ஆனால் நாகரீகச் சீர்திருத்தம் என்னும் கொடியபழக்கம் மற்ற நல்ல பழக்கங்களை ஒவ்வொன்றாய் ஒழிக்க முயல்வதுபோல் இதையும் ஒழிக்கப் பார்க்குமோவென்று அஞ்சவேண்டியிருக்கிறது.

---

## வைத்தியக் குறிப்பு.

(314-ம் பக்கத் தொடர்ச்சி)

முறைக்காய்ச்சலில் நாலாமுறைக் காய்ச்சலென்று சொல்லும் சுரங்களுக்கு கொய்னாமுதலிய ஔடதங்கள் பயன்படுவதில்லை. அத்தகைய சுரங்களுக்கு கழற்சி வித்து 1 பாகம், சீரகம் $\frac{1}{2}$ பாகம், மிளகு $\frac{1}{2}$ பாகம் தூள்செய்து கலந்துக் கொண்டு சுரம் விட்டதுமுதல் மறுபடியும் சுரம் வரவேண்டிய தினத்திற்குள் 3 மணி நேரத்திற்கொருதரம் 10 குண்டுமணி நிறை மருந்தை சர்க்கரையுடன் கலந்து சாப்பிட்டால் சுரம்வராமல் தடுத்துவிடும். இந்த நாலாமுறை காய்ச்சலுக்கு இதைவிட நல்ல ஔடதம் வேறேயிருப்பதாய் நம் மனதிற்குப் புலப்படவில்லையேனும், வேறு சிகிச்சைகளுமிருக்கக்கூடும். சாதாரணமாய்வரும் இரண்டாம்முறை காய்ச்சலுக்கு பல ஔடதங்கள் உள்ளன. அவற்றில் சில கூறுவாம். தும்பையிலையும், மிளகு, பூண்டு இவைகளையும் அரைத்து சுரம் வரும் நாள்பார்த்து காலையில் சாப்பிட்டுவிட்டால் சுரம் நின்றுவிடும். அல்லது சுரப்பட்டை $\frac{1}{4}$ பலம்; நிலவேம்பு $\frac{1}{16}$ பலம், வேம்பு $\frac{1}{4}$ பலம், சுக்கு $\frac{1}{8}$ பலம் இவைகளைத் தட்டிப்போட்டு 6 அவுன்சு ஜலம்விட்டு 3 அவுன்ஸாக சுண்டக் காய்ச்சி நாள் ஒன்றுக்கு 3 தரம் உபயோகித்தால் குணம் உண்டாகும். சீமை சாமந்தி 1 விராகனிடை, நிலவேம்பு $\frac{1}{2}$ விராகனிடை, விஷ்ணுகிராந்தி 1 விராகனிடை இவைகளையும் முன் சொன்னதுபோல் அரைத்து உபயோகிக்கலாம்.

# " ஆனந்தபோதினி " பஞ்சாங்கம்

நளஞு பங்குனிமீ சாலிவாகன 1838, கலியுகாதி 5017,

பசலி 1325-26, கோல்லம் 1091-92,

இங்கிலீஷ் 1917-ம்ஞு மார்ச்—ஏப்ரல்மீ

| மார்ச்மீ | பங்குனிமீ | வாரம் | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 14 | 1 | புத | சஷ்-56-21 | விசா-12-44 | சித்த 60 | உபநயனம் |
| 15 | 2 | வி | சப்-52-29 | அனு-10-41 | சித்த 60 | 4-க்குள் மழை |
| 16 | 3 | வெ | அஷ்-48-13 | கேட்-8-38 | மா 9 அமி | ஆபரணமழித்து செய்ய |
| 17 | 4 | ச | நவ-43-12 | மூல-5-45 | சித்த 60 | புது பசுக்களை வாங்க |
| 18 | 5 | ஞா | தச-37-23 | பூரா-0-52 | அமிர்த 60 | சீமந்தம் |
| 19 | 6 | தி | ஏகா-31-38 | திர-54-16 | அமிர் 60 | கரிநாள் |
| 20 | 7 | செ | சது-25-42 | அவி-50-13 | சித் 50 மா | புது அடுப்புபோட |
| 21 | 8 | புத | திர-19-53 | சதை-46-19 | சி 46 அமி | மருந்துண்ண |
| 22 | 9 | வி | சது-14-29 | பூர-42-53 | சித்த 60 | **அமாவாசை விரதம்** |
| 23 | 10 | வெ | ● அமா 9-30 | உத்-40-2 | சி 40 அமி | புது எருதுகளை ஏர் உழ |
| 24 | 11 | ச | பிர-5-5 | ரேவ-37-55 | மா 38 சித் | தெலுங்கு வருஷப்பிறப்பு |
| 25 | 12 | ஞா | துதி-1-35 | திரி-57-24 | சித்த 60 | புது ஏர் உழ |
| 26 | 13 | தி | சது-57-39 | பர-36-43 | சித் 37 மா | சுரங்கம் வெட்ட |
| 27 | 14 | செ | பஞ்-57-41 | *கார்-37-52 | சித் 38 அ | **கிருத்திகைவிரதம்** |
| 28 | 15 | புத | சஷ்-58-49 | ரோக-40-10 | சித்த 60 | **சஷ்டி விரதம்** |
| 29 | 16 | வி | சப்-60-0 | மிரு-42-25 | மரண 60 | |
| 30 | 17 | வெ | சப்-1-31 | திரு-48-29 | சித்த 60 | சூளையில் நெருப்பிட |
| 31 | 18 | ச | அஷ்-5-6 | புன-54-5 | சித்த 60 | சபை கூட |
| ஏப்ரல்மீ | | | | | | |
| 1 | 19 | ஞா | நவ-9-33 | பூச-60-0 | சித்த 60 | 6-க்குள் மழை |
| 2 | 20 | தி | தச-14-29 | பூச-0-21 | சித்த 60 | ஜபம் பூர்த்திசெய்ய |
| 3 | 21 | செ | ஏகா-19-37 | ஆயி6-50 | சித்த 60 | மந்திரப் பிரயோகம்செய்ய |
| 4 | 22 | புத | துவா-24-27 | மக-13-4 | சி 13 அமி | கிருஷிசெய்ய |
| 5 | 23 | வி | திரி-28-45 | பூர-18-51 | சித் 19 மா | 5-க்குள் மழை |
| 6 | 24 | வெ | சது-32-5 | உத்-23-41 | சித் 24 அ | வானமாமலை தங்கரதம் |
| 7 | 25 | ச | ○ பௌர்34-19 | அஸ்-27-37 | மரண 60 | புது வுரல் உலக்கை புழங்க |
| 8 | 26 | ஞா | பிர-35-17 | சித்-30-15 | சித்த 60 | ஆபரணம் தரிக்க |
| 9 | 27 | தி | துதி-34-54 | சுவா-31-36 | அமி 32 ம | உபநயனம் |
| 10 | 28 | செ | திரி-33-20 | விசா-31-47 | மா 32 சித் | புது அடுப்பிட |
| 11 | 29 | புத | சது-30-37 | அனு-30-50 | சித்த 60 | காலிகள் வாங்க |
| 12 | 30 | வி | பஞ்-26-57 | கேட்-28-55 | சித்த 60 | புதுவுரல் புழங்க |
| 13 | 1 | வெ | சஷ்-22-20 | மூல-26-4 | அமி 26 சி | தமிழ் வருஷப்பிறப்பு |

PRINTED BY P. R. RAMA IYAR AND CO, MADRAS